E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2022 ஜுன் 25 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

1932 - 2022

வரு. 90 இல. 148 | Saturday 25,June, 2022 | 12 பக்கங்கள்

## ரவூப் ஹக்கீம் எம்.பிக்கு கௌரவ டாக்டர் பட்டம்

### அமெரிக்க பல்கலை வழங்கி கௌரவிப்பு

கிர்னே அமெரிக்கன் பல்கலைக்கழகம் Girne American University ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பிக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது.

06



## முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக தம்மிக்க பெரேரா

பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டார்.

முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகியதையடுத்து, அந்த வெற்றிடத்துக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தேசியப் பட்டியல் மூலம் பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேரா நியமிக்கப்பட்டார்.

கடந்த 22 ஆம் திகதி அவர் சபாநாயகர் முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றிருந்தார்.



## 21 ஆவது திருத்தம் நிறைவேறியதும் சகல மக்களுக்கும் சமமான பலன்

### யாழ்ப்பாணத்தில் நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவிப்பு

***யாழ். விசேட நிருபர்***

21 ஆவது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதும் நாட்டிலுள்ள அனைத்து இன மக்களுக்கும் இன, மத, மொழி வேறுபாடின்றி சமமான பலனை அனுபவிக்க முடியுமென்று நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம், நட்டஈடு வழங்கல் மற்றும் நல்லிணக்க அலுவலகங்களூடாக சில வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

06



### 14,700 மெ.தொன் அரிசி, 250 மெ.தொன் பால்மா, 38 மெ.தொ. மருந்துப் பொருட்கள்;

## தமிழகத்தின் இரண்டாம் கட்ட உதவிப் பொருட்கள் வந்தடைவு



### தூதுவர் கோபால் பாக்லேயினால் துறைமுகத்தில் வைத்து கையளிப்பு

தமிழக மக்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 14,700 மெற்றிக் தொன் அரிசி, 250 மெற்றிக் தொன் பால் மா மற்றும் 38 மெற்றிக் தொன் மருந்துப்பொருட்களடங்கிய பாரிய மனிதாபிமான உதவிப்பொருள் தொகுதியை இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று கையளித்தார்.

நிகழ்வில் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், வி.இராதாகிருஷ்ணன், எம்.உதயகுமார்

06



## முதலில் பொருளாதார ஸ்திரம் அதன் பின்னரே புதிய தேர்தல்

### விசேட அறிக்கையில் பிரதமர் ரணில் அறிவிப்பு

முதலில் பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்பட வேண்டும். அதன் பின்னரே தேர்தலை நடத்த முடியுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



நாடு எதிர்நோக்கியுள்ள தற்போதைய பொருளாதார பின்னடைவுக்கு மத்தியில், அரசாங்கம் உறுதியான பொருளாதார அடித்தளத்தை ஏற்படுத்தினால் மட்டுமே புதிய தேர்தலை நடத்த முடியும் என்றார்.

06

## யாழ்.- பாண்டிச்சேரி படகுச் சேவை பாதுகாப்பு அமைச்சு நேற்று அனுமதி

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

தமிழ்நாட்டின் பாண்டிச்சேரி, காரைக்கால் போன்ற துறைமுகங்களுக்கும் காங்கேசன்துறை துறைமுகத்துக்கும் இடையிலான சரக்கு படகுச் சேவை நடத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வழங்கப்



பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மிக விரைவில் சரக்கு படகுச் சேவை ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

06

### 05 வயதாக தானிருந்தபோது தன்னைக் கடத்தி

## துஷ்பிரயோகம் செய்தவருக்கு மரண தண்டனை விதியுங்கள்

### பாதிக்கப்பட்ட சிறுமி நீதிபதியிடம் கோரிக்கை



ஐந்து வயது சிறுமியை கடத்திச் சென்று பாழடைந்த வீடொன்றினுள் இரண்டு சந்தர்ப்பங்களில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி அச்சிறுமி அணிந்திருந்த காதணிகளையும் கொள்ளையிட்டுள்ளார்.

எட்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இக் குற்றச் செயல் காரணமாக சமூகத்தில் பல அவமானத்துக்குள்ளானதால் குற்றவாளிக்கு மரண தண்டனை வழங்குங்கள் என பாதிக்கப்பட்ட சிறுமியொருவர் நீதிமன்றத்தை

06

### எரிபொருள் நிலையத்தில் தாக்குதல்;

## வைத்தியசாலையில் அனுமதித்த 22 வயது இளைஞன் மரணம்

***யாழ்.விசேட நிருபர்***

யாழ். மாநகர் மகாத்மா காந்தி மணிக்கூட்டு வீதியிலமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து தாக்கப்பட்ட இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையத்திலுள்ள சிலரே இளைஞர் மீது தாக்குதல் நடத்தியதாக அவரது நண்பர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணியளவில் இளைஞர் மீது தாக்குதல் நடத்தப்பட்டு உடனடியாக அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதுடன் நேற்று முன்தினம் இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

06

### அவிசாவளை குற்றத் தடுப்பு பிரிவின்

## OIC க்கு இலஞ்சம் கொடுக்க முயற்சித்த பெண் கைது

### கணவனை விடுவிக்க மனைவியின் செயல்



கஞ்சா விற்பனை செய்தாரென்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட தனது கணவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யாதிருப்பதற்காக அவிசாவளை குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு ஒன்றரை இலட்சம் ரூபாவை இலஞ்சமாக வழங்க முயற்சித்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இப் பெண்ணை இலஞ்ச, ஊழல் ஒழிப்புப் பிரிவினரே கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட

06

## சதொச ஊழியர்களை அரசியலுக்கு பாவித்தார்

### ஜோன்ஸ்டனுக்கு நீதிமன்றம் அழைப்பு

ச.தொ.ச ஊழியர்களை அரசியல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பான விசாரணைகளுக்காக பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட இருவருக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 04ஆம் திகதி ஆஜராகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.



இதேவேளை, கொழும்பில் மே மாதம் 09ஆம் திகதி நடைபெற்ற சம்பவம் தொடர்பாகவும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

06

## ஜூலை 06 வரை எரிவாயு கிடைப்பதற்கு வாய்ப்பில்லை

### வரிசையில் காத்திருக்க வேண்டாம் –லிட்ரோ நிறுவனம்

சமையல் எரிவாயு சிலிண்டர்களை ஜூலை மாதம் 06 ஆம் திகதி வரை கொள்வனவு செய்வதற்காக வரிசைகளில் காத்திருக்க வேண்டாமென லிட்ரோ நிறுவனம் பொது மக்களுக்கு அறிவித்துள்ளது.



எதிர்வரும் ஜூலை 05 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இரண்டு கப்பல்களில் 7,000 மெற்றிக் தொன் சமையல் எரிவாயு நாட்டை வந்தடையவுள்ளது.

அந்தக் கப்பல்களிலுள்ள எரிவாயு கிடைக்கும்


06

## அதிகளவு அரச ஊழியர்கள் எரிபொருள் வரிசைகளில்

### அரச நிர்வாகம் சீர்குலைந்துள்ளதாக குற்றச்சாட்டு

அரச ஊழியர்கள் அதிகளவில் எரிபொருளுக்காக வரிசைகளில் காத்திருப்பதாக பொது நிர்வாக அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனால் அநேகமான அரசாங்க நிறுவனங்களின்



பணிகளை உரிய முறையில் முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

அநேகமான அரசாங்க நிறுவனங்களில் வரவுப் பதிவுக்காக கைவிரல் அடையாளம் பயன்படுத்தாத

06

## படகு மூலம் அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 35 பேர் கைது

### பாணந்துறை கடலில் கடற்படை அதிரடி

ஆழ்கடல் மீன்பிடி படகு மூலம் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 35 பேரை கடற்படையினர் மேற்குக் கடற்பகுதியில் கைது செய்துள்ளனர்.

அவர்கள் பயணித்தஆழ்கடல் மீன்பிடி படகும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. பாணந்துறை கடற்பகுதியில் நேற்று முன்தினம் மாலை கடற்படையினர்

06



## மாணவர் விசாவுக்கான விண்ணப்பங்களை விரைவாக சமர்ப்பிக்கவும்

பிரிட்டனுக்கான மாணவர் விசா விண்ணப்பங்களை துரிதமாக சமர்ப்பிக்குமாறு கொழும்பிலுள்ள பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.



மாணவர்கள் தமது விசாவுக்கான விண்ணப்பங்களை துரிதமாக சமர்ப்பிக்குமாறு பரிந்துரைப்பதாகவும் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு முடிவுகள் வெளியாக

06

## யாழ்.காங்கேசன்துறையில் வெட்டுக் காயங்களுடன் மூதாட்டி சடலமாக மீட்பு

***யாழ்.விசேட நிருபர்***

காங்கேசன்துறை – கொல்லங்கலட்டி பகுதியில் குடிசையொன்றில் தனிமையில் வாழ்ந்த மூதாட்டி கழுத்து வெட்டப்பட்டு நேற்று (24) வெள்ளிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் அணிந்திருந்த நகைகள் கொள்ளையடிக்கப்படவில்லை. எனினும் கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் இவரது சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதுவரை கொலைக்கான காரணம் கண்டறியப்படவில்லையென

06

## திகதி ஒதுக்கப்பட்டும் அதிகாரிகள் வரவில்லை

### ஆட்பதிவு திணைக்களத்தில் பதற்ற நிலை

ஆட்பதிவு திணைக்களத்தின் ஒரு நாள் சேவையின் கீழ் ஆள் அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்வதற்கு நேற்று திகதி வழங்கப்பட்டபோதும் அடையாள அட்டைகளை வழங்க அதிகாரிகள் இல்லாத காரணமாக ஆட்பதிவு திணைக்களத்துக்கு முன்பாக நேற்று (24) பதற்றம் ஏற்பட்டது.



06

### மே 09 காலிமுகத்திடல் சம்பவம்;

## ஜோன்ஸ்டன் MPயிடம் 04 மணிநேர வாக்குமூலம்

மே 09 காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான அரசாங்க ஆதரவாளர்களின் தாக்குதல்கள் தொடர்பிலான விவகாரத்தில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிடம் சி.ஐ.டி.யினர் நேற்று (24) நான்கு மணி நேரம் விசாரணைகளை நடத்தினர். குற்றப் புலனாய்வு திணைக்கள பொலிஸ் அத்தியட்சகர் ஜயதிலக



06

### இலஞ்ச ஊழல் வழக்கு;

## குமார வெல்கமவுக்கு விடுதலை கிடைத்தது

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவை விடுதலை செய்யுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.



இவ்வழக்கு நேற்று கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

06

# சர்வதேச செய்திகள்

## ஆப்கான் பூகம்பம் நிவாரண பணியில் இடையூறு



பூகம்பத்தால் அவதிக்கு உள்ளாகியிருக்கும் ஆப்கானிஸ்தானில் சரியான தொடர்புகள் இல்லாதது, ஒழுங்கான வீதிகள் போடப்படாதது ஆகிய காரணங்களால் நிவாரணப் பணிகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை 6.1 ரிக்டர் அளவிலான பூகம்பம் ஆப்கானிஸ்தானை உலுக்கியது. 1000க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். சுமார் 1,500 பேர் காயமடைந்தனர். 3,000க்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்தன.

தனது உலக உணவுத் திட்டத்தின் கீழ் உணவு மற்றும் தளவாடங்களை ஆப்கானிஸ்தானின் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பி வருவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது. முதலில் 3,000 குடும்பங்களுக்கு உதவ இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

அதிகமாக பாதிக்கப்பட்டோருக்கு உதவுமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உத்தரவிட்டுள்ளதாக அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சலிவன் அறிக்கை ஒன்றில் கூறினார். ஐரோப்பிய ஒன்றியமும் உடனடியாக உதவி வழங்கப்போவதாகத் தெரிவித்தது.

ஜப்பான், தென்கொரியா, ஆப்கானிஸ்தானின் அண்டை நாடான பாகிஸ்தான் ஆகியவையும் உதவி வழங்க முன்வந்துள்ளன.

தனது அண்டை நாடான ஆப்கானிஸ்தானுக்கு உதவியையும் ஆதரவையும் வழங்க இந்தியா உறுதியுடன் இருப்பதாக அந்நாட்டின் வெளியுறவு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட பூகம்பத்தைத் தொடர்ந்து, அங்கு வாந்திபேதி நோய் பரவலாம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமானப் பிரிவு எச்சரித்துள்ளது.

அங்கு வாந்திபேதி நோய் பரவுவதைத் தடுப்பதற்கான ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## கிழக்கு உக்ரைனில் ரஷ்யா முன்னேற்றம்



கிழக்கு உக்ரைனில் மேலும் இரு கிராமங்களைக் கைப்பற்றி ரஷ்யப் படை முன்னேற்றம் கண்டுள்ளது.

இது குறித்து உக்ரைன் இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

லிசிசான்ஸ்க் நகரையொட்டிய இரு கிராமங்களிலிருந்து உக்ரைன் படையினர் பின்வாங்கியுள்ளனர். கூடுதல் படையினரைத் திரட்டி வரும் ரஷ்ய இராணுவத்தால் உக்ரைன் படையினர் சுற்றுவளைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டது. அந்தப் பகுதியில் ரஷ்யா தனது முழு திறனையும் பயன்படுத்தி தாக்குதல் நடத்தி வருகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தெற்கு திசையிலிருந்து லிசிசான்ஸ்க் நகரை நோக்கி ரஷ்யப் படையினர் 5 கி.மீ. மேல் முன்னேறியுள்ளதாக பிரிட்டன் கூறியுள்ளது.

## டெஸ்லா காருக்கு சீன நகரில் தடை




சீனா தலைமையின் முக்கிய வருடாந்த கூட்டம் வரும் ஜூலை முதலாம் திகதி தொடக்கம் இரண்டு மாதங்கள் இடம்பெறுவதால் சீனத் துறைமுக நகரான பெய்டெய்ஹேவுக்கு டெஸ்லா கார்கள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது.

பெய்டெய்ஹே போக்குவரத்துப் பொலிஸ் படையணி இதனை உறுதி செய்ததோடு இதுபற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என்று தெரிவித்தது.

டெஸ்லா காரில் பொருத்தப்பட்டிருக்கும் கெமராக்கள் பாதுகாப்பு அச்சுறுத்தலை அதிகரித்திருப்பதாக அச்சம் நிலவுவதற்கு மத்தியிலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலில் ஆரம்பக் கால பள்ளிவாசல் கண்டுபிடிப்பு



இஸ்ரேலில் உள்ள நெகேவ் பாலைவனத்தில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியில் ஆரம்பக் கால பள்ளிவாசல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது அப்பகுதி மக்கள் கிறிஸ்தவ மதத்தில் இருந்து இஸ்லாம் மதத்திற்கு மாறியிருப்பதை வெளிச்சம் போட்டுக் காட்டும் வகையில் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

பெடோயின் அரபு பழங்குடியின மக்கள் அதிகம் வசிக்கும் ரஹாட் நகரத்தில் நெகேவ் பாலைவனம் அமைந்துள்ளது.

மாக்காவின் திசையை பார்த்த வகையில் அரைவட்ட சுவருடன் சதுர அறை மற்றும் சுவர்களை கொண்டதாக இந்த பள்ளிவாசல் காணப்படுகிறது.

இந்த பள்ளிவாசல் 1,200 ஆண்டுகளுக்கு மேல் பழைமையானது என்று நம்பப்படுகிறது. கட்டட நிர்மாணப் பணி ஒன்றின்போது பள்ளிவாசல் இடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஏழாம் நூற்றாண்டின் முதல் பாதியில் முஸ்லிம்கள் இந்தப் பகுதியை கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பிய ஒன்றியத்தில் வேட்பாளரானது உக்ரைன்




ஐரோப்பிய ஒன்றியத்தில் உக்ரைனும் மோல்டோவாவும் வேட்பாளர் என்ற நிலையில் சேர்ந்துகொள்ள, ஒன்றியத் தலைவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளனர்.

அந்த முடிவைத் தனித்துவமான, வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம் என்று உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி பாராட்டினார்.

ரஷ்யாவின் படையெடுப்பிலிருந்து தன்னைத் தற்காத்துக்கொள்ளவும் ஐரோப்பாவில் இடம்பிடிக்கவும் உக்ரைன் முயன்றுவருகிறது.

உக்ரைனின் எதிர்காலம், ஐரோப்பிய ஒன்றியத்துடன் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

ஒன்றியத்தின் பாராளுமன்றக் கட்டடத்தின் முன்புறத்தில் 30 மீற்றர் உயரமுள்ள கம்பத்தில் உக்ரைனியக் கொடி நிறுவப்பட்டுள்ளது.

உக்ரைன் ஐரோப்பிய ஒன்றியத்தில் அதிகாரபூர்வமாக இணைய இன்னும் பல ஆண்டுகள் ஆகலாம். ஆனால் ரஷ்யாவின் நடவடிக்கையைக் கண்டிப்பதற்காக, ஒன்றியத்தில் உக்ரேனைச் சேர்த்துக்கொள்வது துரிதப்படுத்தப்படலாம் என்று கூறப்படுகிறது. இந்த வேட்பாளர் அந்தஸ்து என்பது ஐரோப்பிய ஒன்றியத்தில் உக்ரைனை இணைத்துவிடாது மேலும் பாதுகாப்பு உத்தரவாதங்களையும் இதன் மூலமாக உக்ரைனால் பெற முடியாது.

அதே நேரம் இந்த அந்தஸ்து கொண்ட நாட்டுக்கு தொழில்நுட்ப மற்றும் பொருளாதார உதவிகளை ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்க முடியும். இந்த அந்தஸ்து வழங்கப்பட்டதற்கான நோக்கம் நிறைவேற்றப்படாவிட்டால் வேட்பாளர் அந்தஸ்தை திரும்பப்பெறவும் சட்டம் வகை செய்வது குறிப்பிடத்தக்கது.

## மெக்சிகோ: துப்பாக்கி மோதலில் 13 பேர் பலி



மெக்சிகோவின் மேற்கு மாநிலமான ஜலிஸ்கோவில் பொலிஸாருக்கும் குண்டர் கும்பலைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோருக்கும் இடையில் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றுள்ளது.

அதில் 4 பொலிஸ் அதிகாரிகளும் 9 சந்தேக நபர்களும் கொல்லப்பட்டனர்.

கடந்த புதன்கிழமை இரவு வேளையில் குவாடலஹாரா நகரின் புறநகர்ப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் அந்தச் சண்டை இடம்பெற்றது. அது 1 மணி நேரத்துக்கு மேல் நீடித்தது என்று கூறப்பட்டது.

துப்பாக்கிச் சண்டைக்குப் பின்னர் ஒரு பெண்ணின் சடலம் உட்பட, 9 பேரின் சடலங்கள் அந்த இடத்தில் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது. அந்த வீட்டில் சிறைபிடிக்கப்பட்ட இருவர் காப்பாற்றப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

துப்பாக்கிதாரிகள் வாயை கட்டிய சிலரை அந்த வீட்டுக்குள் கொண்டு சென்றதாக பொலிஸாருக்கு அளிக்கப்பட்ட புகாரை அடுத்து அந்தத் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றது.

சம்பவத்தில் சிலர் கைதுசெய்யப்பட்டனர்; பல வெடிபொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

## அமெரிக்கா, இந்தியாவின் பெரும் வர்த்தக கூட்டாளி



சீனாவை விஞ்சி இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக கூட்டாளியாக அமெரிக்கா உருவெடுத்திருப்பதை புதிய தரவுகள் காட்டுவதாக இந்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் 119.4 பில்லியன் டொலரைத் தொட்டுள்ளது.

இந்த சாதனை தரவுகளின்படி, அமெரிக்காவுக்கான இந்தியாவின் வர்த்தக ஏற்றுமதி கடந்த நிதி ஆண்டில் 51.62 பில்லியன் டொலரிலிருந்து 76.11 பில்லியன் டொலர்களாக அதிகரித்திருப்பதோடு இறக்குமதிகள் 29 பில்லியன் டொலரில் இருந்து 43.31 பில்லியன் டொலர் வரை உயர்ந்துள்ளது.

## திபெத்தியர் சர்வதேச சமூகத்துக்கு அழைப்பு



சர்வதேச அகதிகள் தினத்தை ஒட்டி தமக்கு ஆதரவு அளிக்கும்படியும், சீனாவுக்கு எதிராக கூட்டு நிலைப்பாட்டை எடுக்குமாறும் திபெத்தியரை மறக்க வேண்டாம் என்றும் சர்வதேச சமூகத்தை திபெத்தியர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

மனித உரிமை செயற்பாட்டாளர் மற்றும் எழுத்தாளருமான பெனடிக்ட் ரொஜர்ஸ், திபெத்தியர்கள் மீதான சீனாவின் அடக்குமுறையை சுட்டிக்காட்டி, ரிச்சட் கெரே, பிரேட் பிட் மற்றும் பீஸ்டி போய்ஸ் போன்ற பிரபலங்களின் ஆதரவுடன் தலாய் லாமாவின் துணிச்சலான முயற்சிகளால் திபெத்தியர்கள் பல ஆண்டுகளாக உலக மக்களின் அவதானத்தை ஈர்த்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

## ரஷ்யாவுக்கு ஆதரவை வழங்க சீனா தயக்கம்



வர்த்தகம், பொருளாதாரம் உள்ளிட்ட பிற விடயங்களில் தனது சொந்த நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, உக்ரைன் மீதான போரில் ஈடுபட்டுள்ள ரஷ்யாவுக்கு அதிக ஆதரவை வழங்குவதில் சீனா மீண்டும் மீண்டும் தயக்கம் காட்டி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ‘ஹொங்கொங் போஸ்ட்’ குறிப்பிட்டிருப்பதாவது, உக்ரைனுடன் போரில் ஈடுபட்டுள்ள ரஷ்யாவுக்கு அதிக ஆதரவை வழங்க சீனா வெளிப்படையாக மறுத்துள்ளது. இதனையிட்டு ரஷ்ய அதிகாரிகள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஜெர்மனில் பங்கீடு முறையில் எரிவாயு



ஜெர்மனிக்கு எரிபொருள் விநியோகத்தை ரஷ்யா குறைத்துவிட்டதால் அங்கு எரிவாயுவை பங்கீடு முறையில் வழங்க அந்த நாடு தயாராகி வருகிறது.

உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யா மீது ஐரோப்பிய ஒன்றியம் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்ததால் பல்வேறு ஐரோப்பிய நாடுகளுக்கான எரிபொருள் விநியோகத்தை ரஷ்யா குறைத்தது. இதனால், எரிபொருள் தேவைக்கு ரஷ்யாவை சார்ந்துள்ள ஜெர்மனி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

நிலைமையை சமாளிக்க பல்வேறு கட்ட அவசர நிலைகளை அறிவித்து வந்த அந்த நாடு, ‘எச்சரிக்கை’ கட்ட அவசர நிலையை கடந்த வியாழக்கிழமை அறிவித்தது. இது, எரிவாயு பங்கீடு முறையில் விநியோகிப்பதற்கு முந்தைய கட்டம் என்று கூறப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைக்கு எதிராக எரிவாயுவை ரஷ்யா ஆயுதமாக பயன்படுத்துவதாக ஜெர்மனி பொருளாதார அமைச்சர் ரொபர்ட் ஹபெக் குறிப்பிட்டுள்ளார்.

## தடுப்புமருந்தால் 20 மில்லியன் கொவிட் மரணங்கள் தவிர்ப்பு



கொவிட்19 தடுப்புமருந்துகள் அறிமுகமான முதலாண்டிலேயே 20 மில்லியன் உயிரிழப்புகளைத் தடுத்திருப்பதாய்ப் பெரிய அளவில் நடத்தப்பட்ட ஆய்வின்மூலம் தெரியவந்துள்ளது.


“தி லான்செட் இன்பெக்சன் டிசீஸ்” மருத்துவச் சஞ்சிகையில் ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது. 185 நாடுகளிலிருந்தும் எல்லைகளிலிருந்தும் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

இது 2020ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் திகதிக்கும் 2021ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் நடத்தப்பட்டது.

நேரடியாகவோ, மறைமுகமாகவோ தடுக்கப்பட்ட நோய்த்தொற்று உயிரிழப்புகளின் எண்ணிக்கையைக் கணிக்கும் முதல் முயற்சி இதுவாகும்.

தடுப்புமருந்துகள் இல்லாவிட்டால் 31.4 மில்லியன் உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று கணிக்கப்பட்டது. இதில் 63 வீதம் அதாவது 19.8 மில்லியன் உயிரிழப்புகள் தடுக்கப்பட்டன என்று ஆய்வின் மூலம் தெரியவந்தது.

## 97 கிலோ எடை மலைப்பாம்பு புளோரிடாவில் கண்டுபிடிப்பு



அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலுள்ள எவர்கிளேட்ஸ் பின் பிளட்வுட்ஸ் வனத்தில் ஆராய்ச்சிக் குழுவொன்று 97.5 கிலோகிராம் எடைகொண்ட மலைப் பாம்பைக் கண்டுபிடித்துள்ளது.

புளோரிடாவில் கண்டுபிடிக்கப்பட்ட பர்மிய ரக மலைப்பாம்பு இதுவாகும். அந்தப் பாம்பின் உடலில் 122 பாம்பு முட்டைகள் இருந்ததாக நியுயொர்க் டைம்ஸ் குறிப்பிட்டிருந்தது.

ஆராய்ச்சிக் குழு வேறொரு ஆண் பாம்பின் உடலில் தடம்தேடும் சாதனத்தைப் பொருத்தி அதைப் பின்தொடர்ந்தது. அதன் மூலம் 97.5 கிலோகிராம் எடை கொண்ட பாம்பு கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த மலைப்பாம்பு ஆராய்ச்சியாளர்களில் ஒருவரின் முகத்தை வாலால் தாக்கியதாகக் கூறப்பட்டது.

பர்மிய மலைப்பாம்புகள் தென்கிழக்காசியாவைச் சேர்ந்தவை. அத்தகைய பாம்புகள் புளோரிடா சுற்றுச்சூழலில் விடுவிக்கப்பட்டால் அங்கு வளரும், வாழும் பூர்விகத் தாவரங்கள், விலங்கினங்கள் ஆகியவற்றின் வாழ்வு பெரிய அளவில் பாதிக்கப்படக்கூடும்.

குறிப்பாக அமெரிக்கா முழுவதும் உள்ள வனப்பகுதிகளில் வாழும் வெள்ளைவால் மான்களை பர்மிய மலைப்பாம்புகள் அதிகமாக வேட்டையாடித் தின்கின்றன. அதனால் அந்த வகை மான்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

2022 ஜுன் 25 சனிக்கிழமை




**தொழுகை நேரம்**

| | | |
|---|---|---|
| சுபஹ் | - | 04.33 |
| லுஹர் | - | 12.14 |
| அஸர் | - | 03.41 |
| மஃரிப் | - | 06.29 |
| இஷா | - | 07.45 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆனி 11

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

| | | |
|---|---|---|
| மேஷம் | - | செலவு |
| ரிஷபம் | - | பாராட்டு |
| மிதுனம் | - | தனம் |
| கடகம் | - | போட்டி |
| சிம்மம் | - | கோபம் |
| கன்னி | - | முயற்சி |
| துலாம் | - | நன்மை |
| விருச்சிகம் | - | நிறைவு |
| தனுசு | - | வெற்றி |
| மகரம் | - | பொறுமை |
| கும்பம் | - | மறதி |
| மீனம் | - | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

நெருக்கடியான சூழ்நிலையில்

# இலங்கையை கைவிடாது தொடர்ச்சியான ஒத்துழைப்பு

## ஜனாதிபதியிடம் ஐரோப்பிய தூதுவர்கள் உறுதி

**ஐரோப்பிய நாடுகளை இலங்கையின் நண்பர்களாக கருதுங்களென்றும் தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நெருக்கடியான சூழ்நிலையில் இலங்கையை கைவிடாது தொடர்ச்சியான ஒத்துழைப்பை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நேற்று உறுதியளித்தனர். ஐரோப்பிய நாடுகளை இலங்கையின் நண்பர்களாக கருத்திற்கொள்ளுமாறும் அவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஐரோப்பிய நாடுகளின் தூதுவர் குழுவினருக்குமிடையில் நேற்றைய தினம் கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றது.

இதன்போது, நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் எதிர்கால‌த் திட்டம் தொடர்பில் ஸ்திரமான தகவலை பெற்றுக் கொடுத்தால் சர்வதேச சமூகத்தின் உதவியை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியுமென்றும் அவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

அதன்போது கருத்துத் தெரிவித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ,

விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்குத் தேவையான உரம் மற்றும் எரிபொருளை பெற்றுக் கொடுப்பதன் மூலம் பல

06



# காணி, வீட்டுரிமை இல்லாதோருக்கு சட்ட ரீதியான உறுதி வழங்க ஏற்பாடு

## பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு



சொந்த காணிகள் மற்றும் வீடுகளுக்கான பத்திரம் இல்லாத இலட்சக்கணக்கான மக்களுக்கு காணி மற்றும் வீட்டுரிமையை சட்ட ரீதியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

'அனைவருக்கும் காணி' திட்டத்தின் கீழ் காணியற்ற குடும்பங்களுக்கு காணி உரிமையை வழங்கும் நிகழ்ச்சி பிரதமர் அலுவலகத்தில் நேற்றுக் காலை ஆரம்பமானது.

இத்திட்டம் சுற்றுலா மற்றும் காணி அமைச்சினால் காணி சீர்திருத்த ஆணைக்குழு மற்றும் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

நாடு முழுவதிலுமுள்ள காணிக்கான சட்டபூர்வ உரிமை இல்லாத சகலருக்கும் காணி உரிமையை வழங்குவதற்கான முதற்கட்ட நடவடிக்கை நேற்று முதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

காணிகளை இழந்தவர்களுக்கு சட்டப்பூர்வ உரிமை வழங்கும் நோக்கில் தயாரிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வாரமும் 1,000 முதல் 3,000 வரையிலான உறுதிப்பத்திரங்களை இவ்வாறு வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டத்திற்கு சமாந்தரமாக புத்தளம் மற்றும் குருநாகல் பிரதேச செயலகப் பிரிவுகளில் நேற்று உரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. உரிமைப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வில், தொழிலாளர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் மனுஷ நாணயக்கார, காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் காணி ஆணையாளர் நாயகம் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# திங்கள் முதல் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் கவனம்

## கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த அறிவிப்பு

பாடசாலை கல்வி நடவடிக்கைகளை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

பாடசாலைகள் நடத்தப்படும் முறை தொடர்பில் நேற்று மாகாண மட்டத்தில் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. இந்தப் பேச்சுவார்த்தையின் பின்னர் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழமை போன்று பாடசாலை கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்து பரிசீலிக்கப்படும். அத்துடன் பல பகுதிகளிலுள்ள பாடசாலைகளில்

06

# ஹற்றனில் 20 எரிவாயு சிலிண்டர்கள் கைப்பற்றல்

ஹற்றனில் இருந்து கொழும்புக்கு பொதிச் சேவை நிறுவனத்தின் ஊடாக அனுப்பப்பட இருந்த 20 எரிவாயு கொள்கலன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

நுகர்வோர் விவகார அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

ஹற்றனிலுள்ள பொதிச் சேவை நிறுவனத்தின் களஞ்சியசாலையில் இருந்து குறித்த எரிவாயு கொள்கலன்கள் மீட்கப்பட்டுள்ளதாக அதிகார சபை தெரிவித்துள்ளது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு

# ருவாண்டாவில் இலங்கை, இந்திய வெளியுறவு அமைச்சர்கள் பேச்சு

## ஜெய்சங்கர் தனது டுவிட்டரில் பதிவு




ருவாண்டாவின் கிகாலியில் நடைபெற்று வரும் பொது நலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றுள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கருடன் (23) இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

இந்த இக்கட்டான நேரத்தில் இந்தியா, இலங்கைக்கு நல்கிய விரிவான ஆதரவுக்கு அமைச்சர் பீரிஸ் அன்பான பாராட்டுக்களைத் தெரிவித்தார். மிகவும் சவாலான இந்தக் காலகட்டத்தை எதிர்கொள்வதற்கு இந்த உதவி இலங்கைக்கு மிகவும் பேருவியாக அமைந்துள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள்

06

# எரிபொருள் தட்டுப்பாட்டினால் குதிரை வண்டியில் பயணம்




யாழ். நகரில் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அருட்தந்தையர் ஒருவர் குதிரை வண்டியில் தனது பயணத்தை மேற்கொண்டு வருகின்றார்.

நாடு முழுவதும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருட்தந்தை ஒருவர் தனக்குத் தேவையான எரிபொருளை பெற்றுக் கொள்வதில் இடர்பாடுகள் காணப்படுவதன் காரணமாக குதிரை வண்டியில் தனது வழமையான செயற்பாடுகளை மேற்கொள்வதாக தெரிவித்தார்.

# மூன்று சட்டமூலங்களுக்கு சபாநாயகர் கையொப்பம்



பாராளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட கைத்தொழிற் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம், குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டமூலம் மற்றும் குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவை(திருத்தச்)சட்டமூலம் ஆகியவற்றில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தனது கையொப்பத்தையிட்டு (23) சான்றுரைப்படுத்தினார்.

கைத்தொழிற் பிணக்குகள் தீர்ப்பதில் நீதவான் நீதிமன்றங்களில் காணப்படும் நெரிசலைக் குறைப்பதற்கு தொழில் நியாய சபைகளின் தலைவர்களை மேலதிக நீதவான்களாக கருதுவதற்கும் அதனுடன் தொடர்புபட்ட விடயங்களுக்கு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் கைத்தொழிற் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தினால் எதிர்பார்க்கப்படுகின்றது.

# திங்கள் முதல் பாடசாலைக்கு செல்ல முடியாது

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

**யாழ். விசேட நிருபர்**

போக்குவரத்து தொடர்பில் தமக்கு முறையான அறிப்பு இல்லையென்றால் திங்கள் முதல் பாடசாலைக்குச் செல்ல முடியாது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் ஊடகங்களுக்கு அனுப்பிய செய்தி குறிப்பிலேயே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஆசிரியர்களின் போக்குவரத்திற்கு ஏதாவது பொறிமுறையை உருவாக்குமாறு பல தடவைகள் அரசிடம், அமைச்சிடம் கோரிக்கை முன்வைத்தோம்.

அதற்கு இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை. நாளுக்குநாள் நெருக்கடிகள் அதிகரித்தே செல்கின்றன. பொது மக்களுக்கும் ஆசிரியர்களுக்கும் முரண்பாடுகள் உருவாக ஆரம்பித்துவிட்டன.

இந்த நிலையில் எமது போக்குவரத்திற்கான பொறிமுறை உருவாக்கப்படாவிட்டால் திங்கள் முதல்

06

விவசாய அமைச்சின் கீழியங்கும்

# அனைத்து நிறுவன ஊழியர்களின் விடுமுறைகள் ஜூலை 6 முதல் இரத்து



**லோரன்ஸ் செல்வநாயகம்**

விவசாய அமைச்சின் கீழியங்கும் அனைத்து நிறுவனங்களின் ஊழியர்களினதும் விடுமுறைகள் அனைத்தும் எதிர்வரும் ஜூலை 06ஆம் திகதி முதல் இரத்துச் செய்யப்படுவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு கிடைக்கவுள்ள 60,000 மெற்றிக் தொன் யூரியா உரத்தை காலக்கிரமத்தில் முறையாக பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு வசதியாகவே அனைத்து ஊழியர்களினதும் விடுமுறைகள் இரத்துச் செய்யப்படுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கம் இலங்கைக்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ள 65,000 மெற்றிக் தொன் யூரியா உரம் எதிர்வரும் ஜூலை 06ஆம் திகதி கப்பல் மூலம் நாட்டுக்கு கிடைக்கவுள்ளது.

அதனை பயிர்ச்செய்கைக்காக விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளுக்காக முறையான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

யூரியா உரம் நாட்டுக்கு கிடைத்ததும் அது கப்பலிலிருந்து இறக்கப்பட்டு ஜூலை ஏழாம் திகதி

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 244.15 | 255.48 |
| கனடியன் டொலர் | 273.07 | 285.76 |
| யூரோ | 375.29 | 389.89 |
| ஜப்பான் யென் | 2.6188 | 2.7267 |
| சிங்கப்பூர் டொலர் | 255.44 | 266.18 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 435.14 | 451.89 |
| சுவிஸ் பிராங்க் | 368.98 | 385.23 |
| அமெரிக்க டொலர் | 356.67 | 367.39 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 957.25 | கட்டார் ரியால் | 98.79 |
| குவைத் டினார் | 1,176.45 | சவூதி ரியால் | 96.05 |
| ஓமான் ரியால் | 937.39 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.25 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆனி மாதம் 11ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்கஃதா பிறை 24

### குறள் தரும் சிந்தனை



ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து

கொடுமைகளைக் கண்டும்கூட உறுதி படைத்தவர்கள் அமைதியாக இருப்பது அச்சத்தினால் அல்ல; அது ஆட்டுக்கடா ஒன்று தனது பகையைத் தாக்குவதற்குத் தன் கால்களைப் பின்னுக்கு வாங்குவதைப் போன்றதாகும்.

## இன்றைய நெருக்கடியில் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட இடமளிக்கலாகாது!

இலங்கையில் பாடசாலைகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் கல்வி பயில்கின்ற மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் நீண்ட காலமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. கடந்த 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இப்பாதிப்பு அவ்வப்போது தொடர்ந்து கொண்டே வருகின்றது. மாணவர்களால் இன்னுமே தங்களது கல்வியை உரியபடி தொடர முடியாமல் இருக்கின்றது.

2019 ஆம் ஆண்டு புனித ஈஸ்டர் பண்டிகையன்று பயங்கரவாதக் கும்பல் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதலையடுத்து நிலவிய அச்சம் காரணமாக பாடசாலைகள் சில காலமாக மூடப்பட்டிருந்தன. பாடசாலைகள் மீண்டும் இயங்கத் தொடங்கிய வேளையில் உலகப் பெருந்தொற்றான கொவிட் தாக்கம் இலங்கையிலும் பரவியதையடுத்து கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

ஆனாலும் 'ஒன்லைன்' ஊடாகவும், அதன் பின்னர் பாடசாலைகளை மீள ஆரம்பித்தும் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதையடுத்து பொதுப் பரீட்சைகளும் நடத்தப்பட்டன. ஆனாலும் மாணவர்களால் முழுமையான தயார்படுத்தலுடன் பரீட்சைக்குத் தோற்ற முடியாதிருந்தது. ஆனாலும் கல்வி நடவடிக்கைகளை இடையூறின்றித் தொடர்வதற்கு வேறு வழியே இருக்கவில்லை.

எமது நாடு கடுமையான போராட்டங்களுக்குப் பின்னர் கொவிட் தொற்று பரவுதலை வெற்றி கொண்டதையடுத்து பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. பாடசாலைகள் சீராக இயங்கிக் கொண்டிருந்த வேளையில், மற்றொரு தடங்கல் தற்போது உருவாகியுள்ளது. அதுதான் இன்று எமது நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி ஆகும். இலங்கையில் தற்போது எரிபொருளுக்கு நிலவுகின்ற கடும் தட்டுப்பாடு காரணமாக போக்குவரத்து சேவைகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

எரிபொருள் நிலையங்களில் பெற்றோல், டீசல் பெறுவதற்காக வாகனங்கள் நீண்ட தூரத்துக்கு வரிசையில் காத்து நிற்கின்றன. எனவே மாணவர்களுக்கான போக்குவரத்து சேவையை தனியார் வாகனங்கள் பெரும்பாலும் நிறுத்திக் கொண்டு விட்டன. அதேசமயம் பொதுப் போக்குவரத்து சேவையையும் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலைமைக்கு மாணவர்கள் உள்ளாகியுள்ளனர். எனவே மாணவர்களைப் பொறுத்தவரை பாடசாலைக்கு சமுகமளிப்பதென்பது இலகுவான காரியமல்ல.

ஆசிரியர்களின் நிலைமையும் அவ்வாறானதுதான். பெரும்பாலான ஆசிரியர்கள் தூர இடங்களில் இருந்தே தமது பாடசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளது. இன்றைய போக்குவரத்து நெருக்கடியைப் பொறுத்தவரை தூர இடங்களில் இருந்து அன்றாடம் பாடசாலைக்குச் செல்வதென்பது இயலாத காரியம். ஆசிரியர்களுக்கு முடிந்தவரை அருகாமையிலுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்கும்படியான நடைமுறையொன்றை அமுல்படுத்தினால் இப்பிரச்சினையை ஓரளவாவது தவிர்க்க முடியும்.

ஆனால் ஆசிரியர் இடமாற்றம் என்பது கல்வி அலுவலகங்களுடன் மாத்திரம் சம்பந்தப்பட்ட விடயம் அல்ல. இடமாற்ற சபையின் செல்வாக்குதான் அங்கே அதிகமாக உள்ளது. இடமாற்ற சபையில் அங்கம் வகிக்கின்ற தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சமயோசிதமாகவும், திறந்த மனதுடனும் சிந்தித்துச் செயற்பட்டால் இடமாற்ற விடயத்தில் ஆசிரியர்கள் கொண்டுள்ள துன்பத்தையும் விரக்தியையும் போக்க முடியும். ஆசிரியர் இடமாற்ற சபையிலுள்ள உறுப்பினர்கள் பாரபட்சமாகவும், ஆசிரியர்களின் கஷ்டங்கள் புரியாமலும் செயற்படுவதாக தொடர்ச்சியாக குற்றச்சாட்டுகள் வெளிவருவதையும் இவ்விடத்தில் குறிப்பிட வேண்டியுள்ளது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, இன்றைய பொருளாதார நெருக்கடியினால் உருவான போக்குவரத்து பிரச்சினை காரணமாக பாடசாலைகளுக்கு அடிக்கடி விடுமுறை வழங்கப்படுகின்றது. இதனால் மாணவர்கள் மீண்டும் பாடசாலைச் சூழலில் இருந்து அந்நியப்பட்டுப் போகின்ற நிலைமையொன்று உருவாகி வருகின்றது. கற்பித்தல், கற்றல் நேரம் பெருமளவு குறைவடைந்து கொண்டு போகின்றது. இதன் காரணமாக மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்றதென்பது புலனாகின்றது.

போக்குவரத்து நெருக்கடி தீவிரமடைவதால் பாடசாலைகளை வழமையைப் போன்று சுமுகமாக இயங்க வைப்பதென்பது இயலுமான காரியமல்ல. அதற்காக மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதற்கும் இடமளிக்க முடியாது. எனவே 'ஒன்லைன்' எனப்படுகின்ற நிகழ்நிலைக் கற்பித்தல் மூலமே மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு வழியுண்டு.

கொவிட் தொற்று காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டுக் கிடந்த காலப் பகுதியிலும் ஒன்லைன் ஊடாகவே கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் கிராமப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் அனைவராலும் அதனை சீராகத் தொடர முடியாதிருந்தது. 'ஸ்மார்ட் போன்' வசதியைக் கொண்டிருக்காத வறிய மாணவர்கள் முற்றாகவே 'ஒன்லைன்' ஊடான கல்வியைப் பெற முடியாத நிலைமைக்கு உள்ளாகினர். ஆசிரியர்கள் பலர் ஒன்லைன் ஊடான கற்பித்தலில் முற்றாகவே ஈடுபடவில்லையென்ற குற்றச்சாட்டுகளும் பெற்றோரால் தெரிவிக்கப்பட்டிருந்தன.

நிகழ்நிலைக் கல்வியைப் பொறுத்தவரை இப்பாதிப்புகள் குறித்து பிரதானமாகக் கவனத்தில் கொள்வது அவசியம். இல்லையேல் வறிய மற்றும் கிராமங்களிலுள்ள மாணவர்களுக்கு கல்வி வாய்ப்பு கிடைக்காமல் போவதற்கு இடமுண்டு. கல்வி வாய்ப்பு அனைத்து மாணவர்களுக்கும் சமமாகக் கிடைப்பதற்கு இடமளிக்கப்படுவது மிக முக்கியம்.

எவ்வாறாயினும் இன்றைய எரிபொருள் நெருக்கடியானது குறுகிய காலத்தில் முடிவுக்கு வரக் கூடிய பிரச்சினையல்ல. தீர்வு வரும்வரை மாணவர்களின் கல்வியை ஒத்திவைக்க முடியாது. தகவல் தொழில்நுட்பம் அபாரமாக வளர்ச்சியடைந்துள்ள இன்றைய யுகத்தில் ஒன்லைன் ஊடான கற்பித்தலில் ஆசிரியர்கள் அனைவரும் ஈடுபடக் கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

editor.tkn@lakehouse.lk

# எரிபொருள் நிலையங்களில் இடம்பெறுகின்ற முறைகேடுகளுக்கு எதிராக நடவடிக்கை தேவை!



## எரிபொருள் மாபியாக்கள் பெருகியுள்ளதாக அம்பாறை மாவட்ட மக்கள் வேதனை!

அத்தியாவசிய சேவைகளுக்காக தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையம் உள்ளிட்ட சில எரிபொருள் நிரப்பு நிலையங்களினால் உருவாக்கப்படும் 'எரிபொருள் மாபியா' தொடர்பில் மக்கள் அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக அலைக்கழிக்கப்படும் அரச ஊழியர்கள் மற்றும் சாதாரண பொதுமக்கள் தொடர்பில் யாரும் கவனம் செலுத்தவோ அல்லது சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவோ அல்லது பொறிமுறை ஒன்றை உருவாக்குவது தொடர்பாகவோ இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதே மக்களின் கருத்தாக உள்ளது.

இதேநேரம் நாட்டில் அரசாங்கம் மீது குற்றம் சுமத்தும் நாம் நமது பிரதேசத்தில் இடம்பெறும் முறைகேடுகளை தட்டிக் கேட்கின்றோமா? என ஒரு முறை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அப்படியான ஒரு அநீதியான நிலையில்தான் இன்றைய சில எரிபொருள் நிலையங்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. சில பெற்றோல் நிலைய உரிமையாளர்களும் ஊழியர்களும் இணைந்தே இன்று பெற்றோல் மாபியாவை உருவாக்கியுள்ளனர் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

மக்களுக்கு வழங்க வேண்டிய பெற்றோலை பதுக்கும் இவர்கள், முகவர்கள் மூலம் 1500 வரையில் விற்பனை செய்து கொள்ளை இலாபம் ஈட்டி வருவதை பலர் அறிவதில்லை. இந்நிலை பெற்றோலுக்கு மாத்திரமன்றி அனைத்திலும் இடம்பெறுகின்றது. இதனை கேட்பதற்கோ பார்ப்பதற்கோ யாரும் இல்லாத நிலையில் அவர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

ஆனாலும் இவ்வாறானவர்கள் இன்று மக்களுக்கு பதில் சொல்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் இறைவனுக்கு பதில் சொல்லியே ஆக வேண்டும். இதுவே எரிபொருளுக்காக காத்திருக்கும் மக்களின் கருத்து ஆகும்.

அது அவ்வாறிருக்க அத்தியாவசிய சேவைகளுக்காக மாவட்ட செயலகத்தால் தெரிவு செய்யப்பட்ட பெரிய எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கூட ஜெனரேட்டர் இல்லாத நிலையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டால் பல மணிநேரம் உத்தியோகத்தர்களும் அப்பாவி மக்களும் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. அவ்வாறான எரிபொருள் நிலையத்தை அத்தியாவசிய சேவைக்காக சிபாரிசு செய்தவர்கள் யார்?

அது அவ்வாறிருக்க டோக்கன் சிஸ்டத்தை அறிமுகப்படுத்தும் போது கூட அவர்களுக்கு வேண்டப்பட்டவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகின்றது. இதற்குள் வன்முறைத்தனமும் பணமும் உள்ளவர்கள் உள்ளடக்கப்பட்டு விடுவர். இதற்கிடையே அரசியல் மற்றும் செல்வாக்கு மிக்கவர்களின் சொகுசு வானங்கள் எவ்வித தடையுமின்றி பெற்றோல் நிலையத்தினுள் நுழையும். அவர்களது வாகத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வாகத்திற்குத் தேவையான அளவு எரிபொருள் நிரப்பப்படும்.

அது போதாதென்று வாகனத்தில் உள்ளே உள்ள கொள்கலன்களும் நிரப்பப்படும். அது போகட்டும் என பார்த்தால் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர்களே தங்களுக்கு தேவையானவர்களின் கொள்கலன்களை பெற்று எரிபொருளை நிரப்பிக் கொடுப்பர்.

இந்நிலையில் பாதுகாப்பு வழங்க வேண்டிய பாதுகாப்பு தரப்பில் இருந்தும் சில வாகனங்கள் உள்ளே நுழைந்து எரிபொருளை பெற்றுக் கொள்ளும்.

இத்தடைகளை எல்லாம் தாண்டிய பின்பே வரிசையில் நாட்கணக்காக மணிக்கணக்கான காத்து நிற்கும் அப்பாவி மக்களுக்கும் ஏன் அரச உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்படும். இந்நிலையில் இடைநடுவில் எரிபொருள் முடிவடைந்து விட்டதாக தகவல் வரும். இதுவே இன்றைய சில எரிபொருள் நிரப்பு நிலையங்களின் நிலைமை. குறிப்பாக அத்தியாவசிய சேவைகளுக்காக தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையம் எனும் போர்வையில் நாளாந்தம் எரிபொருளை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் இருந்து பெற்றுக் கொள்ளும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இவ்வாறான முறைகேடுகள் தொடர்கின்றன.

ஆகவே குறித்த விடயங்கள் தொடர்பில் அரசாங்கமும் அதிகாரிகளும் உரிய நடவடிக்கை விரைவாக எடுக்கவில்லையாயின் அம்பாறை மாவட்ட மக்கள் பாதிக்கப்படுவர் என்பது நிதர்சனமான உண்மை.

வி. சுகிர்தகுமார்...
(வாச்சிக்குடா விஷேட நிருபர்)

# குடும்பத்தையே குட்டிச்சுவராக்கி சீரழித்து விடும் போதைவஸ்து பாவனையை இல்லாதொழிப்போம்!

அண்மைக் காலமாக இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்திருப்பதாகவும், தற்போது மதுபானங்களின் விலை அதிகரித்துள்ளதால் கஞ்சா கலந்த போதையை தூண்டும் போதைவஸ்துகளின் பயன்பாடு அதிகரித்திருப்பதாகவும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ஞானதாச பெரேரா எச்சரிக்கை விடுத்துள்ளார்

எனவே அத்தகைய போதைவஸ்துகளை கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாகவே முன்னெடுக்க வேண்டும் என்றும் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ஞானதாச பெரேரா தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி(நாளை) அனுஷ்டிக்கப்படவிருக்கும் போதைவஸ்து ஒழிப்பு சர்வதேச தினத்தின் தொனிப்பொருளாக 'ஆரோக்கியம், மனிதாபிமானம் ஆகியவற்றுக்கு சவால் விடுக்கும் போதைப் பாவனை' *(Addressing drug challenges in health and humanitarian crises)* அமைகிறது.

போதைப் பொருட்கள் பண்டைக்காலம் முதல் பாவனையில் இருந்து வந்துள்ளன. அபின், கஞ்சா, கள், சாராயம், கசிப்பு, பீடி, சிகரெட், சுருட்டு என்பன மக்களால் பாவிக்கப்பட்டு வந்தன. விஞ்ஞான வளர்ச்சி காரணமாக பண்டைக்கால போதைவஸ்துக்கள் நவீன உருவிலும் இலகுவான தன்மையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன. மிகச் சிறியளவு போதைவஸ்தை பாவிப்பதன் மூலம் அதிகளவு போதை தரக் கூடியதாக தயாரிக்கப்படுகின்றன. இதன் காரணமாக போதைவஸ்துக்கள் இலகுவாக கடத்தவும் பரிமாற்றம் செய்யவும் வாய்ப்பாக உள்ளது.

நவீன உலகில் பண்டைக் காலத்து போதைவஸ்துக்கள் மாதிரி அல்லாது மேற்கத்தேய நாடுகளால் ஹெரோயின், கொகேய்ன், கோடீன், மோர்பீன், கனபிஸ், மர்ஜுவானா, ஹஸீஸ், ஐஸ், கஞ்சா கலந்த போதைவஸ்து போன்ற நவீன போதைவஸ்துக்களும் மற்றும் மாத்திரை வடிவில் தயாரிக்கப்படும் மாத்திரைகளும் சர்வதேச ரீதியில் பல நாடுகளுக்கும் கடத்தப்படுகின்றன. உலகில் சில நாடுகளின் பொருளாதாரம் போதைவஸ்துக்கள் வர்த்தகத்திலே தங்கியுள்ளது.

தீவிர போதைவஸ்து பாவனையாளர்களிடையே ஊசி மூலம் போதை பொருளை உடலில் செலுத்திக் கொள்ளும் பழக்கமும் உள்ளது. இத்தகைய போதைவஸ்து பாவனையாளர்களிடையே இலகுவாக எய்ட்ஸ் வைரஸ் தொற்றிக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகிறது. அமெரிக்காவில் எய்ட்ஸ் நோயாளர்களில் 26 சதவீதமானோர் இத்தகையவர்களே என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

இளைஞர்கள் குறுக்கு வழியில் இன்பம் அனுபவிக்க போதைப் பொருட்களை உட்கொள்கின்றனர். இலங்கையில் தற்போது இலட்சக்கணக்கானோர் போதைவஸ்துக்கு அடிமையாக உள்ளனர் என்று ஒரு தகவல் தெரிவிக்கின்றது.

போதைவஸ்து பாவனை உலகை நீண்ட காலமாக அச்சுறுத்தி வருகின்றது. இவற்றைப் பாவிப்பதால் மக்கள் பல்வேறு நோய்களுக்கு உட்படுவதோடு தனது குடும்பத்துக்கு கெட்ட பெயர் உண்டாக்குவதும் பிறருக்கு தீங்கு விளைவிப்பவராகவும் மாறுகின்றனர்.

இலங்கையின் திறந்த பொருளாதார கொள்கை, உல்லாசப் பயணிகளின் வருகை என்பனவற்றால் நவீன போதைவஸ்துக்கள் நாட்டினுள் பிரவேசிக்க வழிவகுத்தன. இலங்கையை பொறுத்தவரையில் நவீன போதைவஸ்துக்கள் 1980 ஆம் ஆண்டளவில் பரவத் தொடங்கின. இலங்கையில் முதலாவது ஹெரோயின் விற்பனையாளர் 1981 ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி 270 கிராம் ஹெரோயினுடன் களுத்துறை மாவட்டத்திலுள்ள ஒரு ஊரில் கைது செய்யப்பட்டார்.

போதைவஸ்து பொருட்கள் பாவிப்பது, கடத்துவது, வைத்திருப்பது போன்றவற்றுக்கு எதிராக கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. அநேகமான நாடுகளில் இவற்றுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. இலங்கையிலும் போதைவஸ்து கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு கடும் தண்டனை அளிப்பதன் மூலமே போதைவஸ்து பாவிப்பதனால் ஏற்படும் தீங்குகளில் இருந்து எமது நாட்டு சமுதாயத்தை பாதுகாக்க முடியும்.

குடும்ப வாழ்வை சீரழிக்கும், நாட்டை குட்டிச் சுவராக்கும் போதைவஸ்து




ஹெரோயின் போதைவஸ்துக்கள் கைப்பற்றப்பட்டு தீயிட்டு கொளுத்தப்படுகின்றன. இவ்வாறு அக்கறையுடன் செயற்படுவது பாராட்டத்தக்கது.

போதைவஸ்து பாவனையை இல்லாதொழிக்க சில நாடுகளால் போதை குறைந்த சில பொருட்களை அறிமுகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. போதைவஸ்து பாவனையை போதைப் பொருளை வைத்தே தடுக்க முயற்சிப்பது முறையான தீர்வல்ல என சமூக ஆர்வலர்கள் எதிர்ப்பு



பாவனையை வேரோடு களைய ஒவ்வொருவரும் திடசங்கற்பம் பூணுதல் அவசியம். இதற்காக போதைப் பொருள் கட்டுப்பாட்டுச் சபை போதைப் பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் 1984 ஆம் ஆண்டு தொடக்கம் அக்கறையுடன் செயற்படுகிறது.

நாம் ஒவ்வொருவரும் போதைப் பொருள் கட்டுப்பாட்டுச் சபைக்கு ஒத்துழைப்பு நல்குதல் அவசியம். போதைவஸ்து பாவிப்பவர்கள், விற்பனை செய்பவர்கள், நாட்டுக்குள் கடத்தி வருபவர்கள் யாராக இருந்தாலும் எமக்குத் தெரிந்திருக்கும் பட்சத்தில் போதைப் பொருள் கட்டுப்பாட்டுச் சபைக்கு தெரிவிப்பது நாம் எமது நாட்டுக்கும் எமது சமுதாயத்துக்கும் செய்யும் பேருதவியாகும்.

'போதைவஸ்து பாவனைக்கு அடிமையானோரை அதிலிருந்து மீட்டெடுப்பது, புதிதாக போதைவஸ்து பாவனைக்கு அடிமைப்படாமல் இளம் சந்ததியினரை பாதுகாப்பது' என்ற இலக்கில் அரசாங்கம் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது பாராட்டத்தக்கது. அதே நேரம் இன்று இலங்கையில் போதைவஸ்து பாவிப்பது, விற்பனை செய்வது, நாட்டிற்குள் கொண்டு வருவது ஆகிய நடைமுறையில் உள்ள சட்டங்களைப் பொறுத்தவரையில் தண்டனை திருப்திகரமாக இல்லை.இலங்கையில் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் திடீர் திடீர் சுற்றிவளைப்புகள் இடம்பெறுகின்றன. பல ஆயிரம் கிலோ கஞ்சா, தெரிவிக்கின்றனர்.

போதைவஸ்து பாவனையானது பொதுவாக சிறுவர் பராயத்தில் ஏற்பட்டு விடுவதாக சில அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. பாடசாலைக் காலத்தில் தீய நண்பர்களின் சகவாசம் காரணமாக இது ஏற்படுவதாக கூறப்படுகின்றது. உதாரணமாக பாடசாலையில் ஆறாம் தரம் மாணவர்கள் ஆறாம் தரம் மாணவர்களுடனேயே பழகுதல் வேண்டும். ஏழாம் தரம் மாணவர்கள் ஏழாம் தரம் மானவர்களுடனேயே பழக வேண்டும். வித்தியாசமாக வேறு வகுப்பு மாணவர்களுடன் நண்பர்களாக பழகுவது நல்லதல்ல என்று மேற்கத்தேய பேராசிரியர் ஒருவர் தெரிவிக்கிறார்.

அப்படிப் பழகும்போதுதான் கெட்ட விடயங்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இந்த விடயத்தில் பெற்றோர் தங்களது பிள்ளைகள் சக வகுப்பு மாணவர்களுடன் பழகுகிறார்களா அல்லது வகுப்பு கூடிய மாணவர்களுடன் பழகுகிறார்களா என்பதை அவதானிக்க வேண்டும். பாடசாலைப் பருவத்தில் தீய நண்பர்களின் சகவாசம் காரணமாக ஆரம்பத்தில் புகைபிடித்தலில் இருந்து போதைவஸ்து பாவனை வரை வளர்வதாக கூறப்படுகிறது. பெற்றோர் இவ்விடயத்தில் தமது பிள்ளைகள் புகைபிடித்தல், மது அருந்துதல், போதைவஸ்துக்கு அடிமையாகுதல் போன்ற விடயத்தில் தொடர்பில் இருக்கிறார்களா என்பதனை அவதானித்துக் கொண்டே இருக்க வேண்டும்.


கெட்ட பழக்கங்களை முளையிலேயே கிள்ளி விடுவது இலகுவான காரியமாகும். பெற்றோர் தங்களது பிள்ளைகளின் மீது மிகுந்த அவதானம் இருப்பின் இவ்வாறான கெட்ட விடயங்களில் இருந்து தங்களது பிள்ளைகளை காப்பாற்ற முடியும். பெற்றோர் அளவுக்கதிகமாக சுதந்திரமும் பணமும் அளிப்பதன் மூலமே பிள்ளைகள் கெடுவதற்கு வாய்ப்பு அதிகமாக காணப்படுகிறது. எனவே பெற்றோர் பிள்ளைகள் மீது மிகுந்த கவனம் செலுத்துதல் மூலம் இவ்வாறான கெட்ட செயல்களில் இருந்து பிள்ளைகளை நாட்டின் நற்பிரஜைகளாக உருவாக்க முடியும்.

போதைவஸ்து பாவனை இன்று புதிய வடிவத்தில் மாணவர்கள் மத்தியில் பரவி வருவதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது சில மருந்து வகைகளை மாணவர்கள் போதைக்காக பயன்படுத்தி வருவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. போதைவஸ்துக்களை பெற்றுக் கொள்வதை விட மருந்து வகைகளை பெற்றுக் கொள்வது எளிதானது என்பதனால் இதன் மூலம் போதையை ஏற்படுத்த முயற்சி செய்கிறார்கள். மருத்துவர்களால் மனநலம் குன்றிய நோயாளர்களுக்கு பரிந்துரைக்கும் மருந்தை போதைப்பொருள் பாவனையாளர்கள் அதிகமான அளவில் பாவிப்பது அதிகரித்திருப்பதாக கூறப்படுகிறது. எனவே பெற்றோர் தங்களது பிள்ளைகள் மேற்படி மருந்து வகைகள் அதிகமாக பயன்படுத்துகிறார்களா என்றும் அவதானிக்க வேண்டும்.

தங்களது பிள்ளைகளிடத்தில் தன்னம்பிக்கை குறைதல், படிப்பில் ஆர்வம் குறைதல், விளையாட்டுக்களில் ஆர்வம் குறைதல், சோம்பல், சற்று ஆர்வம் குறைந்த தோற்றம், பெற்றோரிடம் வாக்குவாதம் செய்வது, ஆசிரியரிடம் அதிக வாக்குவாதம் செய்வது காணப்பட்டால் பெற்றோர் கூடிய விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட நிலையில் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படும் மருந்துகளேயாயினும் அளவுக்கு மீறி எடுத்துக் கொள்வது ஆபத்தில் முடியும் என்பதை பிள்ளைகளுக்கு பெற்றோர் விளக்கமளிக்க வேண்டும்.

தங்களது பிள்ளைகள் யாராவது போதைவஸ்து பாவனைக்கு அடிமையாகி இருப்பது தெரிந்தால் உடனடியாக மருத்துவமனை, போதைப் பொருட்கள் அடிமைத்தனத்தை போக்கும் இடங்களுக்கு அழைத்துச் சென்று தீவிர சிகிச்சை அளிப்பது முக்கியமானதும் அவசியமானதுமான விடயமாகும்.

போதைவஸ்து பாவனையை முற்றாக ஒழிப்பதற்கு முதலாவது அரசாங்கம் போதைவஸ்து கடத்தல்காரர்களுக்கு உடனடி கடும் தண்டனை அளிக்க வேண்டும். இரண்டாவது பெற்றோர் தங்களது பிள்ளைகளை தீய நண்பர்களின் சகவாசத்திலிருந்து பாதுகாத்து அவதானத்துடன் வளர்த்தெடுக்க வேண்டும்.



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
(யாழ்ப்பாணம்)

# பத்திரிகையாளர் கார்மேகம் 'வாழ்வும் பணியும்' நூல் லண்டனில் இன்று வெளியீடு

**பத்திரிகையாளர் S. M. கார்மேகம் 'வாழ்வும் பணியும்' என்ற நூலின் இரண்டாவது பதிப்பின் வெளியீட்டு விழா லண்டனில் இன்று சனிக்கிழமை (25.06.2022) மு. நித்தியானந்தன் தலைமையில் நடைபெறுகின்றது.**

284 பக்கங்களில் மலையக வரலாற்று ஆய்வாளர் எச். எச். விக்கிரமசிங்க தொகுத்து பதிப்பித்திருக்கும் இந்நூலுக்கு 'கலைமகள்' ஆசிரியர் கிழாம்பூர் சங்கரசுப்பிரமணியம் அணிந்துரையும், தினக்குரல் வாரவெளியீட்டின் முன்னாள் பிரதம ஆசிரியர் பாரதி இராஜநாயகம் முன்னுரையும் எழுதியுள்ளனர்.

1960 முதல் அமரர் கார்மேகத்துடன் நெருங்கிப் பழகிய 45 பேரின் காத்திரமான கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. 'நினைவில் வாழும் என் இனிய தந்தை' என்ற தலைப்பில் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் அவரது புதல்வி கனகா கணேஷ், அமரர் கார்மேகத்தின் துணைவியார் ராஜாம்பாள் கார்மேகம் ஆகியோர் நன்றியுரை எழுதியுள்ளார்கள்.


வீரகேசரியில் அவருடன் பணியாற்றிய அன்னலட்சுமி இராஜதுரை, தற்போது லண்டனில் வாழும் சந்திரசேகரன், வி. தனபாலசிங்கம், வி. தம்பையா, கே. வி. எஸ். மோகன், கே. நித்தியானந்தன், மு. சிவலிங்கம், கந்தையா சற்குணம், ஏ. கே. விஜயபாலன், எஸ். ஜெயபாலன், கே. கோவிந்தராஜ், எச். எச். விக்கிரமசிங்க, ஏ. கே. எம். பிள்ளை, சிவாசிவப்பிரகாசம் (கனடா), லெ. முருகபூபதி, கனடா மூர்த்தி, சிவலிங்கம் சிவகுமாரன் ஆகியோரது கட்டுரைகளுடன்

மு. நித்தியானந்தன், தெளிவத்தை ஜோசப், எம். வாமதேவன், ஏ. கே. சுப்பையா, எஸ். திருச்செல்வம் (கனடா), மல்லிகை சி. குமார், பேராசிரியர் சோ. சந்திரசேகரன், பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன், மனா. மக்கீன், அருள் சத்தியநாதன், எம். என். அமீன், பி. எம். லிங்கம், முன்னாள் செய்தி ஆசிரியர் ராமு நாகலிங்கம் மற்றும் மாத்தளையைச் சேர்ந்த மலரன்பன், மாத்தளை சோமு, மாத்தளை கார்த்திகேசு, எஸ். கிருஷ்ணன், பெ. வடிவேலன், அல்அஸ்மத், பத்திரிகையாளர் கே. வேலாயுதம் உட்பட பலரது காத்திரமான ஆக்கங்கள் இந்த இரண்டாவது பதிப்பில் இடம்பெற்றுள்ளன.

இந்நூலின் முதலாவது வெளியீட்டு விழா கம்போடியாவில்நடைபெற்றஉலகத்தமிழ்மாநாட்டில் முன்னாள் அமைச்சரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வே. இராதகிருஷ்ணன் அவர்களாலும், டில்லியிலுள்ள பிரவாசி பாரதிய யுககேந்திர நிலையத்தில் கோபியோ அமைப்பின் சர்வதேச மாநாட்டில் மலேசியா தலைவர் செல்வராஜ் தலைமையிலும் வெளியீட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றைய வெளியிட்டு நிகழ்வில் அமரர் கார்மேகத்தின் புதல்வியான அவுஸ்திரேலியாவில் வாழும் கனகா கணேஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கதாகும்.

கொட்டகலை கல்மதுரை தோட்டத்தில் பிறந்து கொழும்பு, சென்னை, புதுடில்லி போன்ற இடங்களில் வீரகேசரி, தினமணி பத்திரிகை ஆசிரியர் பீடங்களில் பணியாற்றிய கல்மதுரை கார்மேகம் பற்றிய இந்த நூல் கம்போடியாவில் வெளியிடப்பட்டதில் ஒரு தனிச்சிறப்புண்டு. அதேபோல் இவ்வாறு நோக்கினால், அமரரின் புகழ் கல்மதுரையிலிருந்து கம்போடியா வரை சென்று தற்போது லண்டன் மாநகர் வரை பயணித்திருப்பது சிறப்பம்சமாகும்.




**எச்.எச்.விக்கிரமசிங்க...**

# அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் வாசிப்பு அனுபவப் பகிர்வு இன்று மெய்நிகரில்

**அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம், இலங்கை தமிழ் எழுத்தாளர்களின் நூல்களுக்கு பரிசளிக்கும் திட்டத்தினை கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தி வருகின்றது.**

இத்திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட போட்டியில் 2019 – 2020 ஆம் ஆண்டுகளில் வெளியாகி தலா ஐம்பதாயிரம் ரூபா பரிசு பெற்ற நான்கு நூல்கள் பற்றிய வாசிப்பு அனுபவப்பகிர்வு நிகழ்ச்சி இன்று 25 ஆம் திகதி சனிக்கிழமை மெய்நிகரில் நடைபெறுகின்றது.

எழுத்தாளர் காப்பியக்கோ ஜின்னா ஷரிபுத்தீன் எழுதிய மைவண்ணன் இராம காவியம் (கவிதை) நூல் பற்றிய வாசிப்பு அனுபவத்தை அவுஸ்திரேலியா மெல்பனில் வதியும் வாசகி திருமதி விஜி இராமச்சந்திரனும், எழுத்தாளர்

கே. ஆர். டேவிட் எழுதிய 'கே. ஆர். டேவிட் சிறுகதைகள்' நூல் பற்றிய வாசிப்பு அனுபவத்தை அவுஸ்திரேலியா பிறிஸ்பேர்னில் வதியும் எழுத்தாளர் திருமதி தாமரைச்செல்வியும், எழுத்தாளர் சீமான் பத்திநாதன் பர்ணாந்து எழுதிய 'குஞ்சரம் ஊர்ந்தோர்' (நாவல்) பற்றிய வாசிப்பு அனுபவத்தை கிளிநொச்சியில் வதியும் எழுத்தாளர் கருணாகரனும், எழுத்தாளர் எம். வாமதேவன் எழுதிய 'குன்றிலிருந்து கோட்டைக்கு' (கட்டுரை) நூல் பற்றிய வாசிப்பு அனுபவத்தை கொழும்பிலிருந்து எழுத்தாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மல்லியப்பு திலகரும் சமர்ப்பித்து உரையாற்றுவர்.




இந்த மெய்நிகர் நிகழ்வில் இணைந்து கொள்ளுமாறு எழுத்தாளர்களும் கலை, இலக்கியவாதிகளும் வாசகர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

★நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு : லெ. முருகபூபதி

★நேரம்: அவுஸ்திரேலியா: இரவு 700 மணி, இலங்கை – இந்தியா: மாலை 230 மணி, இங்கிலாந்து: முற்பகல் 10 – 00 மணி, ஐரோப்பா: முற்பகல் 11.00 மணி, நியூசிலாந்து: இரவு 900 மணி

Join Zoom Meeting
https://us02web.zoom.us/j/88435805663?pwd=OS9tNTh6MTVaWXFtOCtaRnpBNmsOUTo9
Meeting ID: 884 3580 5663
Passcode: 353292

**தகவல்: லெ.முருகபூபதி...**

## சுகாதார அமைச்சு விடுத்த அவசர கோரிக்கையையடுத்து

# 10,000 தடுப்பூசிகளை வழங்கி உதவிய தனியார் நிறுவனம்

**இலங்கையின் சீமெந்து உற்பத்தியாளரான INSEE Cement, இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஏற்பட்டுள்ள மருந்துப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக 10,000 Erythropoietin (EPO) தடுப்பூசிகளை சுகாதார அமைச்சிடம்**

நாட்டின் கிராமப்புறங்களில் சிறுநீரக நோயால் (Chronic Kidney Disease) பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு இரத்த சோகைக்கு சிகிச்சை யளிப்பதன் அவசியம் குறித்து சுகாதார அமைச்சு விடுத்த அவசர கோரிக்கைக்கு இணங்க, ரூபா 40 மில்லியன் பெறுமதியான இந்த நன்கொடை இலங்கை INSEE Cement நிறுவனத்தின் தாய் நிறுவனமான Siam City Cement Public Limited நிறுவனத்தால் கொள்வனவு செய்து வழங்கப்பட்டுள்ளது.




சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன, மருத்துவ தொழில்நுட்ப சேவைகள் பணிப்பாளரான வைத்தியர் அன்வர் ஹம்தானி, இலங்கைக்கான தாய்லாந்து தூதுவரான போஜ் ஹார்ன்பொல், தாய்லாந்து தூதரகத்தின் பிரதம செயலாளரான பீரபட் டோங்ரோட் மற்றும் INSEE Cement நிறுவனத்தின் சார்பில் அதன் பணிப்பாளர் சபைத் தலைவரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான நந்தன ஏக்கநாயக்க, வெளிவிவகாரங்கள் மற்றும் வியாபார மேம்பாட்டுக்கான தலைமை அதிகாரியான சந்தன நாணயக்கார ஆகியோர் இந்த கையளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டனர்.

"பொறுப்புணர்வுடைய மற்றும் எடுத்துக்காட்டான ஒரு நிறுவனம் என்ற வகையில், INSEE Cement நிறுவனம், எங்களின் வணிக நோக்குக்கு அப்பாற்பட்ட புதிய வழிமுறைகள் மற்றும் முயற்சிகளை தொடர்ந்து கண்டறிந்து, உதவி தேவைப்படும் நேரங்களின் போது சக இலங்கைப் பிரஜைகளுக்கு ஆதரவளித்து வருகிறது" என INSEE Cement நிறுவனத்தின் பணிப்பாளர் சபைத் தலைவரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான நந்தன ஏக்கநாயக கருத்துத் தெரிவித்தார்.

"தாய்லாந்தின் Siam Bioscience Company நிறுவனத்திடமிருந்து 10,000 தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதற்கு உதவிய தாய்லாந்தின் Siam City Cement Public Company நிறுவனத்தின் ஆதரவை நாங்கள் பாராட்டுகிறோம். சுகாதார அமைச்சின் அவசர கோரிக்கைக்கு எங்களின் உடனடியான மற்றும் தக்க தருணத்தில் செயற்படுவது முக்கியமான மருந்து பற்றாக்குறையை நிவர்த்தி செய்து உயிர்களைக் காப்பாற்ற உதவுகிறது என்று நம்புகிறோம்" என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மனிதனின் மூடநம்பிக்கையும் மதவெறியும் உலகை அழிவை நோக்கியே இட்டுச் செல்லும்!

**இயற்கை எப்போதுமே அமைதியானது. ஆனால் உலகில் இயற்கையைக் குழப்பும் காரியத்தில் மனிதன் ஈடுபட்டு கொண்டிருக்கின்றான். அதனால் நிம்மதி இல்லை, அனர்த்தங்கள் சூழ்கின்றன. நிம்மதியாக வாழ்வதற்கு உடல், உள வலிமை அவசியம். அதனை வழங்கி நோயற்ற வாழ்க்கைக்கு இட்டுச் செல்வது யோகாசனம் ஆகும். இந்துமதத்தின் தனித்துவமான யோகாசனம் இன்று உலகிலே அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கின்றது.**

இவ்வாறு காரைதீவில் நடைபெற்ற சர்வதேச யோகா தினத்தில் கலந்து கொண்ட இந்து ஸ்வயம் சேவக சங்க பாண்டிருப்பு பொறுப்பாளர் பிஆர் .தர்மராஜா குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச யோகா தினம் காரைதீவு லட்சுமி அம்பாள் மண்டபத்தில் அம்பாறை மாவட்ட இந்து ஸ்வயம் சிவசங்கர் பொறுப்பாளர் இரா. குணசிங்கம் ஜி தலைமையில் நடைபெற்றது .

கல்முனையிலும், காரைதீவிலும் சர்வதேச யோகா தினம் இவ்வாரம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அங்கு அவர் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"பணத்தை மையமாக வைத்து பொருளாதார ரீதியில் அபிவிருத்தியைக் காண மனிதன் முற்பட்டான். அதனால் மனித குலம் இன்று சீரழிந்து கொண்டிருக்கிறது. மனித மனத்தை சிந்திக்கத் தவறி விட்டான். வெளிநாடுகளில் இயந்திரத்தை மையமாக வைத்து ஆராய்ச்சி செய்ய, கீழைத்தேய நாடுகளில் மனிதனுடைய மனதில் நுழைந்து ஆராய்ச்சி செய்ய முற்பட்டன.

மனிதனுக்கு சாந்தித்தியம் தேவை. சாந்தித்தியமில்லாத இடத்து அவரோ சமூகமோ நிம்மதியாக நிலையாக வாழ முடியாது. மனிதகுலம் இன்று அமைதியை இழந்து நிற்கிறது. இந்து தர்மம் தனக்கென்று கண்டுபிடித்த தத்துவங்கள் மார்க்கங்களை எல்லாம் உலகிற்கு வழங்கி வருகின்றது. அதனால் இன்று இந்து சமூகத்தின்பால் வெள்ளைக்காரர்களும் கூட ஈர்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

உடலையும் உள்ளத்தையும் கட்டுப்படுத்தும் ஒருவர்தான் உலகை வெல்கிறார். அவரால் தான் உலகு பயன்படுகின்றது. மூடநம்பிக்கையும் மதவெறியும் உலகை அழித்து விடும் என்று கூறுகின்றார் பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சர் . உடலை வலிமையாக்குவது யோகாசனம், மனதை வலிமையாக்குவது தியானம். உடல் இரும்பு போன்ற வலிமை உடையதாக இருக்க வேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார்.

அந்தக் காலத்தில் சித்தர்கள் இந்த மனதைத் தேடி அலைந்தார்கள். அவர்களுக்குள்ளேயே அந்த நிம்மதி தேடி வந்தது. இந்து தர்மத்தின் தனித்துவமானது இந்த யோகாசனம். அதனை உலகிற்கு அளிக்க வேண்டிய தருணம் வந்து விட்டது. இந்து மதம் உலகத்திற்கு இந்த யோகாவை அறிமுகப்படுத்தியது. அதனால் சர்வதேச யோகா தினம் ஜுன் மாதம் 21ஆம் திகதி உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டு வருகின்றது.

உடலையும் உள்ளத்தையும் கட்டுப்படுத்துகின்ற சிறந்த பயிற்சி யோகா. மகாபாரதத்தில் கிருஷ்ண பரமாத்மாவிடம் கேள்வி வருகின்றது. ஒருவர் தனது உள்ளத்தை கட்டுப்படுத்துவதானால் தொடர் பயிற்சியும் பற்றற்ற நிலையும் வேண்டும் என்று பதில் வருகிறது.

அந்த வகையிலே இந்த யோகாவையும் தியானத்தையும் ஒருங்கிணைக்கும் பொழுது எங்களை நாங்களே கட்டுப்படுத்திக் கொள்ளலாம். அது மாத்திரமல்ல நோயற்ற வாழ்க்கைக்கு அது இட்டுச் செல்லும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை .

இன்று மனிதன் ஒழுங்கற்ற வாழ்க்கை முறை, ஒழுங்கற்ற உணவு முறை, ஒழுங்கான நேர முகாமைத்துவம் இல்லாமல் தனது வாழ்க்கையை சீரழித்து வருகின்றான். அதன் பலனாகவே நிம்மதி இழக்கப்பட்டு இருக்கின்றது. ஆகவே அதிலிருந்து நாங்கள் விடுபட வேண்டுமாக இருந்தால் யோகாவையும் தியானத்தையும் செய்து நாங்கள் சிறப்புற வாழ வேண்டும்."





## இந்து மதம் உலகுக்கு வழங்கிய யோகா உடலையும் உள்ளத்தையும் பக்குவ–நிலையில் என்றும் வைத்திருக்கும்

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வில், யோகாசனப் பயிற்சி, அதன் முக்கியத்துவம் பற்றிய சொற்பொழிவு, அமுத கானம் போன்றன இடம்பெற்றன. நிகழ்வில், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன், உதவி கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள். அக்கரைப்பற்று, பாண்டிருப்பு, கல்முனை போன்ற பகுதிகளிலிருந்து இந்த நிகழ்விற்கு மாணவர்களும், பெரியோர்களும் வருகை தந்திருந்தார்கள்.

இதேவேளை சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் யோகா தின நிகழ்வு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கல்முனை உவெஸ்லி உயர்தர தேசிய பாடசாலை மைதானத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே அதிசயராஜ் தலைமையில் திருமுன்னிலை அதிதி ஸ்ரீமத் சுவாமி தக்ஷஜானந்தா ஜீ (இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு) முன்னிலையில் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

"இந்துமதம் உலகத்திற்கு அளித்த பெரும் பொக்கிஷம் யோகா. மனதை கட்டுப்படுத்தவும், உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கவும் யோகா அவசியமாகின்றது. யோகா செய்தவன் உலகை வெல்வான்" என்று அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜெ. எம்.டக்ளஸ் அங்கு தெரிவித்தார்.

கல்முனையில் நடைபெற்ற சர்வதேச யோகா தின வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் "சிறு பிள்ளைகள் தொடக்கம் முதியவர்கள் வரை 1500 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட ஆன்மிக நிகழ்வில் காலைப் பொழுதில் பேசுவதில் பெருமையடைகிறேன். அம்பாறை மாவட்டத்தில் இந்து சமயம் சார்ந்த நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடந்து வருவதில் சந்தோஷம் அடைகிறேன்" என்றார்.

இராம கிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு மாநில தலைவர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ் ஆசியுரை ஆற்றுகையில் "எமது உடல் ஆரோக்கியமாகவும், எமது என்பு வலிமையாகவும் இருக்க வேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் அன்றே சொன்னார். மனதைக் கட்டுப்படுத்துவதற்கு யோகாசனம் மிகவும் பயனுள்ளது. யோகாவைப் பயின்றவர்கள் மனதைக் கட்டுப்படுத்தி உலகையே வெல்வார்கள் என்றால் மிகையல்ல.

அறநெறி மாணவர்கள் சிறுவயதிலிருந்தே யோகாவை பயின்று கொண்டால் வாழ்க்கையில் சிறக்கும். ஆரோக்கியமாக நிம்மதியாக வாழ்வதற்கு இது உதவும்" என்றார்.

இந்நிகழ்விற்கு திருமுன்னிலை அதிதியாக இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தட்ஷஜானந்தஜீ மகராஜ், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜெ.எம்.ஏ.டக்லஸ், கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே .ஜெகதீசன், சிறப்பு அதிதிகளாக நாவிதன்வெளி பிரதேச செயலாளர் சோ. ரங்கநாதன், காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன், நாவிதன்வெளி உதவி பிரதேச செயலாளர் பே.பிரணபரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வி.ரி. சகாதேவராஜா...**
*(காரைதீவு குறுாப் நிருபர்)*

# பஞ்சிகாவத்தையில் வீதி மறியல் போராட்டம்





ஏ.எஸ். எம்.ஜாவித்

பஞ்சிகாவத்தையில் கடந்த 5 நாட்களாக எரிபொருளுக்கு வரிசைகளில் காத்திருந்த போதிலும் எரிபொருள் கிடைக்காததால் நேற்றுக் காலை பஞ்சிகாவத்தை சீபெற்கோ எரிபொருள் நிரப்பு நிலயத்திற்கு முன்பாக வீதியை மறித்து முச்சக்கர வண்டிச் சாரதிகள், மோட்டார் சைக்கிள் ஓட்டுனர்கள் மற்றும் கார் சாரதிகள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது தமக்கான எரிபொருளை உடனடியாக தருமாறும், அதுவரும் வரையில் வீதிமறியல் போராட்டம் இடம்பெறும் எனவும் கோசமிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இது விடயமாக கொழும்பு சிற்றி பொலிஸ் உயர் அதிகாரி சம்பவ இடத்திற்கு வருகை தந்து எரிபொருள் நிரப்பு நிலைய அதிகாரிகளுடன் கதைத்து எரிபொருளை பெற்றுத் தருவதாக வாக்குறுதியளித்ததன் பின்னரே வீதி மறியல் போராட்டம் கைவிடப்பட்டது. சுமார் 3 மணி நேரம் வீதியை மறித்து போராட்டம் நடத்தியதில் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

நண்பகல் 1 மணியளவில் பெற்றோல் பவுசர் வருகை தந்ததுடன் கடந்த 5 நாட்களாக காத்திருந்தவர்களுக்கு பெற்றோல் வழங்கப்பட்டது.

## ஜூலை 06 வரை...தொடர்...

வரை கையிருப்பில் குறைந்தளவேனும் எரிவாயு இல்லையென லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அடுத்த மாதம் 10 ஆம் திகதியின் பின்னர் 25,000 மெற்றிக்தொன் எரிவாயு தாங்கிய பாரியதொரு கப்பல் மாலைத்தீவு கடற்பகுதியை அண்மிக்கவுள்ளது.

அங்கிருந்து சிறு கப்பல்கள் ஊடாக தொடர்ச்சியாக எரிவாயுவை நாட்டுக்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, அடுத்த மாதம் 05 ஆம் திகதியின் பின்னர் நாளாந்தம் 12.5 கிலோ 80,000 சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க திட்டமிட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

## 21 ஆவது திருத்தம்...தொடர்...

கொழும்பு – யாழ். கடுகதி ரயிலில் சென்ற அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ, யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்து பௌத்த கலாசார பேரவையின் அழைப்பில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள நீதி அமைச்சர் யாழ்ப்பாணத்தில் சில தினங்கள் தங்கியிருந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,...

21 ஆவது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதும் நாட்டிலுள்ள அனைத்து இன மக்களுக்கும் இன, மத, மொழி சமனான பலனை அனுபவிக்க முடியுமென்று தெரிவித்த அமைச்சர் அதன் பின்னர் நாட்டுக்கு தேவையான புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

## யாழ். பாண்டிச்சேரி...தொடர்...

இப் படகு சேவை மூலம் தேவையான மண்ணெண்ணெய், டீசல் போன்ற எரிபொருட்களையும், உரம், பால் மா, மருந்துப் பொருட்கள் உட்பட அத்தியாவசியப் பொருட்களை நியாயமான விலையில் தேவையானளவு எடுத்துவர முடியுமென்று வலியுறுத்தி வருகின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இப் படகு சேவையை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க முயற்சிகளிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றார்.

அதேவேளை, பலாலி, திருச்சி, சென்னைக்கிடையிலான விமான சேவையையும் திட்டமிட்டபடி ஜூலை 01 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## OIC க்கு இலஞ்சம் கொடுக்க ...தொடர்...

பெண்ணின் கணவர் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் படி சூட்சுமான முறையில் அவரைக் கைது செய்தனர்.

சந்தேக நபரைக் கைது செய்யும் போது அவர் கஞ்சா விற்பனை செய்து கொண்டிருந்துள்ளதாகவும் அவரிடமிருந்து கஞ்சா விற்பனை மூலம் கிடைத்ததாகக் கூறப்படும் 27,000 ரூபா பணமும் ஒரு தொகை கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து சந்தேக நபரை பொலிஸார் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணைகளை மேற்கொண்டனர். இதன்போதே அவரை பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாதிருப்பதற்காக அவரது மனைவி அவிசாவளை குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு ஒன்றரை இலட்சம் ரூபாவை இலஞ்சமாக வழங்க முயற்சித்துள்ளார்.

## யாழ்.காங்கேசன்துறையில்...தொடர்...

காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்தனர். அப்பகுதியை சேர்ந்த சாணை தவமணி (78) என்ற மூதாட்டியே சடலமாக மீட்கப்பட்டார்.

பெண்ணின் வீட்டு வளாகத்திலுள்ள தோட்டத்துக்கு நேற்று வெள்ளிக்கிழமை காலை தண்ணீர் இறைப்பதற்கு சென்ற உறவினர் ஒருவர் மூதாட்டி இரத்தக் காயங்களுடன் சடலமாக காணப்பட்டதை அறிந்து காங்கேசன்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## குமார வெல்கமவுக்கு ...தொடர்...

கடந்த நல்லாட்சி அரசின் போது இலங்கை போக்குவரத்து சபையில் இல்லாத பிரதித் தலைவர் பதவியை உருவாக்கி அரசாங்கத்துக்கு சுமார் 03 மில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத்தியதாக, இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தது.

## முதலில் பொருளாதார... தொடர்...

விசேட அறிக்கை மூலம் நேற்று முன்தினம் பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மிக முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டவுடன், பொருத்தமான 225 பிரதிநிதிகளை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்வதற்கு பொதுமக்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமெனவும், அவர்களை தெரிவு செய்யும் பொறுப்பும் அதிகாரமும் பொது மக்களுக்குள்ளது எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

நாடு முழுவதும் எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடியைச் சமாளிக்க நாட்டின் பிரஜை ஒவ்வொருவரும் ஒன்றுபட வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி கூறியுள்ளதுடன், அரசியல்வாதிகள் மற்றும் மக்களிடமிருந்து அர்ப்பணிப்பை எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அவ்வாறு காணப்பட்டால் மட்டுமே உலக நாடுகள் இலங்கைக்கு உதவ முன்வருமென பிரதமர் மேலும் கூறினார்.

அத்துடன் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் நாம் உறுதியாக உள்ளோம் என்பதை அரசியல்வாதிகளும், ஒட்டுமொத்த மக்களும் உலகுக்கு நிரூபிக்க வேண்டுமெனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

எனவே நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்துக்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்குமாறு பிரதமர் அனைவரிடமும் கேட்டுக் கொண்டுள்ளார்.

## வைத்தியசாலையில் அனுமதித்த...தொடர்...

யாழ். உடுவில் செப்பாலை கோயிலடியைச் சேர்ந்த செல்வரத்தினம் பிரசாந்த் (வயது 23) என்பவரே உயிரிழந்தவராவார்.

நண்பர் ஒருவருடன் எரிபொருள் நிரப்பு இளைஞர் சென்றுள்ளார். அப்போது இடையில் புகுந்து வந்தவர்கள் எரிபொருள் நிரப்ப முற்பட்டபோது நண்பர் காணொளி பதிவு செய்துள்ளார். காணொளிப் பதிவைத் தடுக்க எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் நண்பரின் கையை முறிக்கியுள்ளார்.

அதன்போது நியாயம் கேட்க முற்பட்ட இளைஞரை எரிபொருள் நிலையத்திலுள்ள மூவர் தலைக்கவசத்தால் தாக்கியுள்ளனர்.

அதனால் இளைஞருக்கு வாய், மூக்கு வழியாக இரத்தம் பெருகியது. அங்கிருந்து வீடு சென்ற இளைஞர் மறுநாள் மதியம் நெஞ்சுவலி மற்றும் உடல் சோர்வடைய யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இரண்டு நாட்களின் பின் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளாரென மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் முன்னிலையில் விசாரணை நடைபெற்றது.

## தமிழகத்தின் இரண்டாம்... தொடர்...

மற்றும் அங்கஜன் இராமநாதன், செந்தில் தொண்டமான் உள்ளிட்ட ஏனைய பலரும் நேற்று கலந்து கொண்டனர்.

கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த மனிதாபிமான உதவிப்பொருட் தொகுதி 03 பில்லியன் இலங்கை ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடையதென்பது குறிப்பிடத்தக்கது.

இந்த பாரிய மனிதாபிமான உதவித்தொகுதி இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான மக்கள் பிணைப்பை சுட்டிக்காட்டும் அதே நேரம், இலங்கையிலுள்ள தமது சகோதர உறவுகளின் நலன்களில் இந்திய மக்கள் கொண்டிருக்கும் அக்கறையையும் பிரதிபலிக்கின்றது. எதிர்வரும் நாட்களில் இந்த பொருட்கள் இலங்கை அரசாங்கத்தால் பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

தமிழக அரசினால் வழங்கப்படும் 40,000 மெற்றிக் தொன் அரிசி, 500 மெற்றிக் தொன் பால் மா மற்றும் மருந்துப்பொருட்கள் உள்ளடங்கிய பாரிய உறுதிப்பாட்டின் இரண்டாம் கட்டமாக இந்த உதவிப்பொருட் தொகுதி அமைகின்றது.

முன்னொருபோதும் இல்லாத வகையில் இலங்கை மக்களுக்காக இந்தியாவினால் வழங்கப்படும் பொருளாதார, நிதி மற்றும் மனிதாபிமான உதவி 2022 ஆம் ஆண்டில் 3.5 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிக பெறுமதியை கொண்டுள்ளது. அந்நியச்செலாவணி ஆதரவான 02 பில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் 1.5 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான மூன்று கடனுதவித் திட்டங்களும் அடங்கும்.

## துஷ்பிரயோகம் செய்தவருக்கு...தொடர்...

கேட்டுக் கொண்ட சம்பவமொன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

இரவு நேரத்தில் தந்திரமான முறையில் வீட்டுக்குள் நுழைந்த நபர் தாய் மற்றும் மூத்த சகோதரிகளுக்கிடையே கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த ஐந்து வயது சிறுமியை கடத்திச் சென்று பாழடைந்த வீடொன்றினுள் இரண்டு சந்தர்ப்பங்களில் சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளார்.

அத்துடன்அச்சிறுமி அணிந்திருந்த காதணிகளைக் கொள்ளையிட்டுள்ளார். இந்த ஐந்து குற்றங்களுக்காக இவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. குற்றவாளியாக உறுதிசெய்யப்பட்ட 40 வயதுடைய ஒருவருக்கே கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்கவினால் 60 வருட கடூழியச் சிறைத்தண்டனையுடன் 95,000 ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

சந்தேக நபர் முதல் தடவையிலேயே குற்றத்தை ஒப்புக் கொண்டதால் குற்றவாளியான நபருக்கு, பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நான்கு இலட்சம் ரூபாவை செலுத்துமாறும் உத்தரவிட்ட நீதிபதி, இவ்வாறு அபராதத்தை செலுத்த தவறினால் மேலும் நான்கரை வருட சிறைத்தண்டனை விதித்ததோடு, சிறைத் தண்டனை காலத்தை ஒரேயடியாக அதாவது ஒரு வருட காலத்தில் நிறைவு செய்யும் வகையில் வழங்குவதற்கும் உத்தரவிட்டார்.

குற்றவாளிக்கு தண்டனையை விதிப்பதற்கு முன்னர் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்ட பாதிக்கப்பட்ட சிறுமியிடம் நீதிமன்றத்தில் கூறுவதற்கு ஏதேனும் உள்ளதா? என வினவியபோபோதே சிறுமி மேற்கண்டவாறு தெரிவித்தார். சிறுமி நீதிமன்றத்தில் கூறியதாவது,..

எட்டு வருடங்களுக்கு முன்னர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட இந்தக் குற்றச் செயலின் காரணமாக தான் சமூகத்தில் அநேக அவமானத்துக்குள்ளானதால் குற்றவாளிக்கு மரண தண்டனை வழங்குங்கள் என நீதிமன்றத்தை கேட்டுக் கொண்டார்.

தற்போதுள்ள சட்டங்களின் அடிப்படையில் குற்றவாளிக்கு குற்றச்சாட்டுகளுக்காக மரண தண்டனை விதிக்க முடியாதென பாதிக்கப்பட்ட சிறுமிக்கு தெளிவுபடுத்திய நீதிபதி குற்றவாளிக்கு கடூழிய சிறைத் தண்டனையை விதித்து தீர்ப்பளித்தார்.

## படகு மூலம் அவுஸ்திரேலியா... தொடர்...

கண்காணிப்பு நடவடிக்கையொன்றை முன்னெடுத்தபோது, சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த ஆழ்கடல் மீன்பிடி படகொன்றை அவதானித்த பின்னர் சுற்றி வளைத்து சோதனையிட்டனர்.

இதன்போது இலங்கையிலிருந்து ஆழ்கடல் வழியாக அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமான முறையில் படகில் செல்ல முயற்சித்த ஆட்கடத்தல் காரர்கள் 05 பேர், 25 ஆண்கள், 04 பெண்கள் மற்றும் 06 சிறுவர்களை கடற்படையினர் கைது செய்தனர்.

கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட ஆழ்கடல் படகின் இயந்திரத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டிருந்ததாகவும், படகு நீண்ட கடல் பயணத்துக்கு பொருத்தமற்ற வகையில் இருந்ததாகவும் கடற்படையினரின் மேலதிக ஆய்வுகளின் போது தெரியவந்துள்ளது.

திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு, நீர்கொழும்பு, கற்பிட்டி மற்றும் நுவரெலியா போன்ற பகுதிகளைச் சேர்ந்த 06 முதல் 56 வயதுகளுக்கிடைப்பட்டவர்களே இவ்வாறு சட்டவிரோத கடல் பயணத்தை மேற்கொண்டுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்கள், அடையாளம் காணப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கொழும்பு துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மக்களை ஏமாற்றி பணம் சம்பாதிக்கும் நோக்கில் ஆட்கடத்தல்காரர்கள் ஏற்பாடு செய்துள்ள இவ்வாறான ஆட் கடத்தலில் சிக்கி சட்டவிரோதமான முறையில் வெளிநாடு பிரவேசிக்க முயற்சித்து சட்டத்தின் முன் சிக்குவதை தவிர்க்குமாறு கடற்படை பொதுமக்களை கோரியுள்ளது.

பழைய மற்றும் நீண்ட கடல் பயணத்துக்கு பொருத்தமற்ற ஆழ்கடல் மீன்பிடிக் படகுகள் தொடர்ந்தும் இவ்வாறான ஆட்கடத்தலுக்குப் பயன்படுத்தப்படுவதாகவும், அவ்வாறான படகுகளில் சட்டவிரோதக் குடியேற்றத்தை மேற்கொள்ள முற்பட்டால் உயிருக்குப் பாரிய ஆபத்து ஏற்படுமெனவும் கடற்படை எச்சரித்துள்ளது.

# சீட்டு பணம் பிரச்சினையில் மூவருக்கு வெட்டுகாயங்கள்

றொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கன்னியா பகுதியில் சீட்டு பணம் குறித்த நேரத்தில் வழங்கப்படாமையினால் சகோதரர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் மூவர் காயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## சதொச ஊழியர்களை...தொடர்...

இதனையடுத்து, தம்மை கைது செய்வதைத் தவிர்க்குமாறு ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ விடுத்த கோரிக்கையையும் நீதிமன்றம் நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அதிகளவு அரச ஊழியர்கள்...தொடர்...

காரணத்தினால் இவ்வாறு பணி நேரத்தில் எரிபொருள் வரிசைகளில் காத்திருப்பதாக தெரிவித்துள்ளார். மேலும் சிலர் காலம் தாழ்த்தியே பணிக்கு சமுகமளிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். சம்பளத்துடன் விடுமுறை பெற்றுக் கொண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளுக்காக காத்திருக்கும் சந்தர்ப்பங்களும் அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

## ரவூப் ஹக்கீம் எம்.பிக்கு...தொடர்...

தமக்கு வழங்கிய கௌரவத்துக்காக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தனது நன்றியையும் தெரிவித்துள்ளார்.

'இக் கௌரவ பட்டத்துக்கு தான் தகுதியானவரென்று கருதுவதையிட்டு மிகவும் தாழ்மையாக உணர்கிறேனென தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், தனக்கு வழங்கப்பட்ட கௌரவப் பட்டத்தைப் பயன்படுத்த வேண்டாமென்றும் அது கலாநிதிக்கான சரியான கற்கையை நிறைவு செய்த பின் பெறப்படவில்லையென ரவூப் ஹக்கீம் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

## மாணவர் விசாவுக்கான...தொடர்...

05 வாரங்கள் செல்லும் என்பதே இதற்குக் காரணமென பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயம் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் அதிகளவிலான விண்ணப்பங்கள் கிடைப்பதாகவும் எனவே உடனடியாக விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க ஆரம்பிக்குமாறும் பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயம் இலங்கை மாணவர்களிடம் கோரியுள்ளது.

## திகதி ஒதுக்கப்பட்டும்...தொடர்...

ஒரு நாள் சேவையின் கீழ் அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ள நேற்று திகதி ஒதுக்கப்பட்ட மக்கள் அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்வதற்காக வருகை தந்தனர்.

இருப்பினும் அட்டைகளை வழங்குவதற்கு அதிகாரிகள் கடமைக்குச் சமுகமளிக்கவில்லையென தெரிவிக்கப்பட்டது. இதன் காரணமாகவே நேற்று அங்கு ஒரு பதற்றமான நிலை காணப்பட்டது.

## ஜோன்ஸ்டன் MPயிடம்...தொடர்...

தலைமையிலான குழுவினர் அவரிடம் விசாரணைகளை நடத்தியதாக குற்றப் புலனாய்வு திணைக்கள தகவல்கள் தெரிவித்தன.

நேற்று முற்பகல் 9.00 மணிக்கு குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்குச் சென்ற ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவிடம் நண்பகல் 1.00 மணி வரையிலும் விசாரணை நடத்தப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டதாகவும், இதன்போது அலரி மாளிகையில் தான் ஆற்றிய உரையின் முழுமையான வடிவம் எனக் கூறி ஒரு இறுவெட்டையும் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரிடம் கையளித்ததாகவும் அறிய முடிகிறது.

## ருவாண்டாவில் இலங்கை... 03ஆம் பக்கத் தொடர்

அமைச்சர் குறிப்பிட்டார். பல்வேறு துறைகளிலான எதிர்கால ஒத்துழைப்பு குறித்தும் இரு அமைச்சர்களும் இதன்போது கலந்துரையாடினர்.

## திங்கள் முதல்... 03ஆம் பக்கத் தொடர்

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வருகை 65 சதவீதமாக பதிவாகியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

நிலவும் எரிபொருள் நெருக்கடியைக் கருத்தில்கொண்டு நாட்டிலுள்ள பல அரச மற்றும் அரச அனுமதிபெற்ற தனியார் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், இணைய வழியில் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## திங்கள் முதல்... 03ஆம் பக்கத் தொடர்

பாடசாலைகளுக்குச் செல்ல முடியாது என்பதனை கல்வி அமைச்சிற்கும் பெற்றோருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இது தொடர்பில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடியபோது வடமாகாணத்தில் விசேடமாக தூர இடங்களுக்கு பணிக்குச் செல்லும் ஆசிரியர்களின் நிலை குறித்து பேசியபோது, அவர்கள் பாடசாலை அதிபருக்கு முறைப்படி அறிவிக்குமாறும் அதனை ஏற்றுக் கொள்ளாத அதிபர்கள் தொடர்பாக தமக்கு தகவல் தருமாறு கூறியுள்ளார்.

ஆகையால் தூர இடங்களுக்குப் பணிக்குச் செல்வோர் போக்குவரத்து இடர்ப்பாடு தொடர்பாக அதிபருக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

## அனைத்து நிறுவன... 03ஆம் பக்கத் தொடர்

முதல் ஜூலை 15ஆம் திகதி வரை அவற்றை போக்குவரத்து செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

விவசாய அமைச்சு, கமநல சேவைகள் திணைக்களம், தேசிய உரச் செயலகம், இலங்கை உர நிறுவனம், கொமர்ஷல் உர நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் அனைத்து ஊழியர்களினதும் ஒத்துழைப்புடனேயே மேற்படி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர், அதனை கருத்திற்கொண்டே அனைத்து ஊழியர்களினதும் விடுமுறைகள் இரத்துச் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## இலங்கையை கைவிடாது... 03ஆம் பக்கத் தொடர்

சிக்கல்களுக்கு தீர்வு பெற்றுக் கொள்ள முடியுமென்பதையும் சுட்டிக் காட்டினார்.

விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படாத அரசாங்கத்தின் காணிகளை விவசாய நடவடிக்கைகளுக்காக மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள ஜனாதிபதி, யுத்தத்தின் பின்னர் மனிதாபிமான நிலையை கருத்திற்கொண்டு மக்களுக்கு நீண்டகால தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது எந்த விதத்திலும் அதில் தலையிடாமல் கட்சி பேதமின்றி நீதியை பெற்றுக் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முதலீடு, சுற்றுலாத்துறை, கல்வித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் தொடர்பில் இங்கு விரிவாக ஆராயப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி பேச்சுவார்த்தையில் ஐரோப்பிய யூனியனின் தூதுவர் டெனிஸ் சாய்பி, பிரான்ஸ் தூதுவர் எரிக் லவேர்ட், இத்தாலியின் தூதுவர் ரீட்டா மெனெல்லா, நோர்வேயின் தூதுவர் ட்ரினே ஜொரான்லி, நெதர்லாந்து தூதுவர் டஞ்சா கொங்கிரிஜ்ப், ஜெர்மனிய தூதுவர் ஹோல்கர் லோதர் ஸ்யூபெர்ட், ஜெர்மனிய தூதுவர் கலாநிதி விக்டர் சியூடியா, துருக்கி தூதுவர் ரக்கிபே ஷெகர்ஜ் ஒக்ழு, ஸ்விட்சர்லாந்து தூதுவர் டொமினிக் பர்க்லெர், ஜனாதிபதி ஆளணி பிரதானி அனுர திசாநாயக்க மற்றும் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டுள்ளனர்.(ஸ)

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஜூன் 25
சனிக்கிழமை

# விசர் நாய்க்கடி தடுப்பு மருந்துகளுக்கு தட்டுப்பாடு

## மடு ஆலய வளாகத்துக்குள் நாய்கள் உலாவுவதற்கு கட்டுப்பாடு

**தலைமன்னார் விஷேட நிருபர்**

மடுபெருவிழாவுக்கு வருவோரின் பாதுகாப்பு கருதி நாய்கள் அப்பகுதிக்குள் உலாவுவதை தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தெரிவித்தார்.

வைத்தியசாலைகளில் தற்பொழுது விலங்கு மற்றும் விசர் நாய்கடிகளுக்கான தடுப்பு மருந்து வகைகள் இன்மையால் மடுபெருவிழாவுக்கு வருவோரின் பாதுகாப்பு கருதி நாய்கள் அப்பகுதிக்குள் உலாவுவதை தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தெரிவித்தார்.



மடு பெருவிழா தொடர்பாக மன்னார் மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் விளக்கமளிக்கையில், எதிர்வரும் யூலை மாதம் மடு அன்னை பெருவிழாவுக்கு அதிகளவில் பக்தர்கள் வருகை தருவார்கள். இப்பகுதியில் கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளன.

ஆகவே தற்பொழுது வைத்தியசாலைகளில் விலங்கு மற்றும் விசர் நாய் கடிகளுக்கான தடுப்பு மருந்து வகைகள் இன்மையால் நாய் தொல்லைகளிலிருந்து மக்களை பாதுகாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# சுகாதார ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்கும் செயற்பாடு முன்னெடுப்பு



**மன்னார் குறூப் நிருபர்**

மன்னாரில் கடமையாற்றும் சுகாதார ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்கும் செயற்பாடு நேற்று வெள்ளிக்கிழமை (24) அதிகாலை தொடக்கம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மன்னார் தலைமன்னார் பிரதான வீதியிலுள்ள IOC எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அனுமதி பெற்ற சுகாதார ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது.

நூற்றுக்கணக்கான சுகாதார ஊழியர்கள் வரிசையில் நின்று எரிபொருளை பெற்று செல்கின்றனர். அதேநேரம் திணைக்கள தலைவர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்களுக்கான விசேட எரிபொருள் விநியோக நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாகன நுழைவு பற்றுச்சீட்டு வழங்குவதில் முறைகேடு

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

சாவகச்சேரி பொதுச்சந்தையில் வாகனங்களுக்கான நுழைவு பற்றுச்சீட்டு வழங்கும் நடவடிக்கைகளில் முறைகேடு இடம்பெறுவதாக நகரசபை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். நகரசபையின் மாதாந்த அமர்வில் இதுதொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. மோட்டார் சைக்கிள் நுழைவுக் கட்டணமான 10 ரூபாவை 20 ரூபாவாக அதிகரித்து வரி வசூலிப்பாளர்கள் பணம் அறவிடுவதாகவும்,அதற்காக பற்றுச்சீட்டில் 10 ரூபா என்ற தொகையை பேனாவால் 20 ரூபா என மாற்றி எழுதி வழங்குவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளனர். இதனையடுத்து நகரசபை நிர்வாகம் சந்தை வளாகத்தில் வாகனங்களுக்கான நுழைவுக் கட்டணப்பெறுமதியை காட்சிப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். அத்துடன் பற்றுச்சீட்டிலுள்ள தொகையை பேனாவால் மாற்றி வரி அறவிட்டால் அதனை வழங்க வேண்டாம் என நகரசபை தெரிவித்துள்ளது.

# படவரை கலைஞர்களின் தவறால் பொதுமக்கள் பாதிப்பு

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

கட்டட அனுமதி விடயத்தில் ஒருசில படவரைஞர்களின் தவறால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதாக சாவகச்சேரி நகர சபை உறுப்பினர்கள் சிலர் சுட்டிக்காட்டியிருந்தனர்.

கட்டடங்களுக்கான அனுமதி விடயத்தில் தொடர்ந்தும் இழுபறி நிலை காணப்படுகிறது. இழுபறி நிலைக்கு படவரைஞர்களின் தவறான படமும் ஓர் காரணமாகும். இதனால் பொதுமக்கள் மீண்டும் ஒரு கட்டட வரைப்படத்தை வரைவதற்கு பணம் செலவழிக்க வேண்டியுள்ளது.இது தொடர்பாக நகரசபை நிர்வாகம் நகரசபை பதிவிலுள்ள படவரைஞர்களை அழைத்து அவர்களுக்கு தெளிவூட்டல் வழங்க வேண்டும். மக்களின் பணம் மற்றும் நேரம் விரயமாவதையும்,கட்டட அனுமதி தாமதமாவதையும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# காரைநகரில் காணி அளவீடு இடைநிறுத்தம்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்.காரைநகரில் பொதுமக்கள்,பொது அமைப்புகளின் எதிர்ப்பால் காணி சுவீகரிப்பிற்கான அளவீடு இடைநிறுத்தப்பட்டது. காரைநகர் தெற்கு j/44 கிராம அலுவலர் பிரிவிலுள்ள மடத்துவெளியில் அமைந்துள்ள கடற்படை தளம் விஸ்தரிப்புக்காக காணியினை அளவீடு செய்வதற்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை நில அளவைத் திணைக்களத்தினர் வருகை தந்தனர். இந்நிலையில் பொதுமக்கள் சிலரின் எதிர்ப்பால் அது இடைநிறுத்தப்பட்டது. எதிர்ப்பு தெரிவித்தவர்களின் எழுத்து மூலமான ஆவணத்தினை பெற்றுக்கொண்டு' அளவீடு திணைக்களத்தினர் திரும்பிச் சென்றனர்.

# அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்தவருக்கு அபாரதம்

**யாழ்.விசேட நிருபர்**

யாழில் கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்த வர்த்தகருக்கு நீதிமன்றம் ஒரு இலட்சம் ரூபாய் தண்டம் விதித்துள்ளதாக யாழ். மாவட்ட செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் தெரிவிக்கையில்,

யாழில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, அதிக விலைக்கு அரிசி விற்ற வர்த்தகர் ஒருவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு மன்றினால் ஒரு இலட்ச ரூபாய் தண்டம் அறவிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# முல்லைத்தீவில் சுகாதார துறையினருக்கு ஒதுக்கப்பட்ட பெற்றோல் மக்கள் போராட்டத்தால் நிறுத்தம்

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவில் சுகாதார துறையினருக்கு ஒதுக்கப்பட்ட பெற்றோல் மக்கள் போராட்டத்தால் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு முள்ளியவளை பகுதியில் அமைந்துள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு மாவட்ட அரசாங்க அதிபரின் அனுமதியுடன் சுகாதார பிரிவு வைத்தியர்கள், உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்காக கடந்த ஒரு வாரத்தின் பின்னர் 6600 லீற்றர் எரிபொருள் நேற்று கிடைக்கப்பெற்றது. எனினும் முதற்கட்டமாக கடந்த





சில நாட்களாக மக்கள் நீண்ட வரிசையில் நின்றமையால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பெற்றோல் வழங்கப்பட்டது.

ஏனைய மக்களுக்கு வழங்காத காரணத்தினால் மக்கள் வீதியினை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் வீதியூடான போக்குவரத்து சுமார் இரு மணிநேரம் தடைப்பட்டது.

அரச உத்தியோகத்தர்களுக்கு பெற்றோல், அதனை மக்களுக்கு வழங்குங்கள் என்று கோஷமிட்டவாறு வீதியினை மறித்த இளைஞர்களால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இதனைதொடர்ந்து பொலிஸாரால் சிறப்பு அதிரடிப் படையினர் அப்பகுதிக்கு வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டது.

இந்நிலையில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று சுகாதார பிரிவினருக்கு வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த எரிபொருளினை மக்களுக்கு வழங்க மாவட்ட அரசாங்க அதிபருடன் தொலைபேசியில் கலந்துரையாடிய, எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மக்களுக்கு வழங்க தீர்மானித்தார். இதனையடுத்து பொலிஸார் தலையிட்டு சிறப்பு அதிரடிப்படையினரின் பாதுகாப்புடன் பெற்றோல் வழங்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில்

# அரச உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் அட்டை விநியோகத்தில் முன்னுரிமை

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா மாவட்டத்தில் பெற்றோல் விநியோகத்தில் முதற்கட்டமாக அரச உத்தியோகத்தர்களுக்கே எரிபொருள் அட்டை விநியோகிக்கப்படவுள்ளதுடன், ஒன்லைன் பதிவுகள் முழுமையாக இடம்பெறும் என மாவட்ட செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எரிபொருள் விநியோக நடைமுறை குறித்து நேற்று 24.06) கேட்ட போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் சீரான முறையில் எரிபொருள் விநியோகம் இடம்பெறுவதற்கான வழிவகைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் முதற்கட்டமாக அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் எரிபொருள் அட்டைகள் வழங்கப்பட்டு அதன் ஊடாக பெற்றோல் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெற்றோல் பெறும் அனைத்து வாகனங்களும் ஒன்லைனில் பதிவு செய்யப்படுவதுடன் பெற்றோல் கிடைப்பனவு மற்றும் தேவைப்பாடு என்பவற்றுக்கு ஏற்ப எரிபொருள் விநியோக அளவுகளில் மட்டுப்பாடுகள் கொண்டு வர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முச்சக்கர வண்டி சாரதிகளின் வாழ்வாதாரத்தை பாதிக்காத வகையில் அவர்களுக்கு வழங்குவதற்கான புதிய நடைமுறையொன்று அமுல்படுத்தப்படவுள்ளது.

அத்துடன், சிறுபோக அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால், டீசல் விநியோகம் தொடர்பில் அவசர கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தற்போது இரசேந்திரங்குளத்தின் கீழான பகுதிகளில் அறுவடை ஆரம்பித்துள்ளமையால் அவர்களது அறுவடைக்கு தேவையான 3000 லீற்றர் டீசல் விநியோகம் நேற்று (24.06) முதல் இடம்பெறும். வவுனியாவில் சிறுபோகத்தில் 12 ஆயிரத்து 238 ஏக்கர் நெற்செய்கை பண்ணப்பட்டுள்ளது. வருகின்ற யூலை முதல் கிழமையிலிருந்து ஆகஸ்ட் கடைசிக்கிழமை வரை இந்த அறுவடை இடம்பெறும் என எதிர்பார்கின்றோம். இதற்காக கிட்டத்தட்ட 3 இலட்சத்திற்கும் மேலதிகமான டீசல் எரிபொருள் தேவைப்படுகிறது. இதனை ஒழுங்குபடுத்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

டிப்பர் முதலான கனரக வாகனங்களுக்கான டீசல் விநியோகத்தில் மட்டுப்பாடுகள் கொண்டு வரப்படவுள்ளது. வவுனியா மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட தொழில்ரீதியான செயற்பாட்டை முன்னெடுக்கும் கனரக வாகனங்களுக்கு டீசல் விநியோகத்தில் முன்னுரிமை வழங்கவுள்ளதுடன், ஏனைய மாவட்ட டிப்பர் போன்ற கனரக வாகனங்களுக்கு சில கட்டுப்பாடுகளும் கொண்டு வரப்படவுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் எரிபொருள் விநியோகம் சீராக இடம்பெறுவது குறித்து தொடர்ந்தும் பரிசீலித்து வருவதுடன், எரிபொருள் தேவை குறித்து அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட செயலக அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# சுகாதார துறையினருக்கு எரிபொருள் கிடைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்

## வைத்திய சேவை முடங்கும் ஆபத்து உருவாகும் வைத்தியசாலை தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு

**யாழ்.விசேட நிருபர்**

எரிபொருள் கிடைப்பதற்கு ஒத்துழைக்காவிடின் அத்தியாவசிய சேவைகளின் ஒன்றாகிய சுகாதார சேவை ஸ்தம்பிக்கப்படுவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய நிலைமை ஏற்படுமென யாழ்.போதனா வைத்தியசாலை தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

யாழ் போதனா வைத்தியசாலையின் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில்,

வட மாகாணத்திலுள்ள மக்கள் அனைவருக்குமான ஒரே ஒரு போதனா வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக்குறை இருந்தபோதும் சிறப்பாக சேவையாற்றி வருவது அனைவருக்கும் தெரிந்ததே.

ஆனால் அண்மைக்காலமாக நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையானது எல்லோரையும் போல் எம்மையும் வெகுவாகப் பாதித்துள்ளது. அதிலும் எரிபொருள் இன்மை காரணமாகவும், அதன் சீரற்ற வழங்கல் காரணமாகவும் வைத்திய சேவை முடங்கும் ஆபத்து உருவாகியுள்ளது.

இதை அனைவரும் உணரத் தலைப்பட்டுள்ளனர். ஆனாலும் சில குறுகிய நோக்கம் உள்ள, மனிதநேயம் அற்ற சிலர் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்பங்களை உருவாக்கி வைத்தியசாலை ஊழியர்கள் எரிபொருள் பெறுவதை தடுப்பதன் மூலம் இன்பம் காண்கின்றனர்.

# வளர்ச்சியடைவதற்கு முன்னரே அழிக்கப்படும் தேக்கு மரங்கள்

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள தேக்கு மரக் காட்டிலிருந்து தேக்கு மரங்கள் தேவையற்ற முறையில் வெட்டப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். 1996ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளினால் தேக்கங்காடு 600 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் உருவாக்கப்பட்டது. குறைந்தது 35 ஆண்டுகளுக்கு பின்னர் தான் தேக்கு மரங்கள் வெட்டப்பட வேண்டும். தற்போது கிராம மட்ட பொது அமைப்புகளின் இணக்கப்பாடுகள் இன்றி தேக்கு மரங்கள் வளர்ச்சியடைவதற்கு முன்பே அழிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. கிராம மட்ட சிவில் பாதுகாப்புக் கூட்டங்களில் பொலிஸார் காடழிப்பு நடைபெற்றால் உடன் தகவல் வழங்குமாறு கூறி வருகின்றனர். எனினும் ஒரு கிராமத்தின் இயற்கை வளம் அதன் வளர்ச்சிக்கு முன்னரே அழிக்கப்பட்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். அதிகாரத்தினை வைத்திருக்கும் திணைக்களங்களே தமது அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்தி தேக்கு மரங்களை வெளியிடங்களுக்கு கொண்டு செல்வதாகவும் இதனை தடுத்து நிறுத்துவதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், துணுக்காய் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவிக்கின்றனர்.

எரிபொருள் நெருக்கடி

# பிரதேச சபை குடிநீர் விநியோகம், கழிவு அகற்றல் பாதிப்பு

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

எரிபொருள் நெருக்கடி காரணமாக பச்சிலைப்பள்ளியின் குடிநீர் விநியோகம், கழிவு அகற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய வறட்சியான சூழலில் பச்சிலைப்பள்ளியின் பல கிராமங்களுக்கு குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகின்றது. எனினும் எரிபொருள் தட்டுப்பாட்டினால் பிரதேச சபை வாகனங்கள் எரிபொருளினைப் பெற்றுக் கொள்வதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. காரணம் நீண்ட வரிசையில் காத்திருக்கும் மக்களை மீறி பிரதேச சபை வாகனங்களுக்கு எரிபொருளினை நிரப்புங்கள் என கூற முடியாது. அதனால் பிரதேச சபையின் செயற்பாடுகளை எரிபொருள் நெருக்கடியால் பாதித்துள்ளது. மேலும் கழிவு அகற்றல் செயற்பாடுகள் தற்போது பாதிக்கப்பட்டுள்ளன. பிரதேச சபைக்கு எரிபொருள் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து பச்சிலைப்பள்ளியில் எதிர்காலத்தில் நிரந்தர குடிநீர் வழங்கலை மேற்கொள்வதன் மூலம் இவ்வாறான நெருக்கடியான காலங்களில் பொது மக்கள் பயன்பெற முடியும் என பிரதேச சபை தவிசாளர் தெரிவித்தார்.

# அக்கராயன் ஆற்றுப்பகுதியில் துப்புரவு பணிகள்

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

கிளிநொச்சி அக்கராயன் ஆறு துப்புரவாக்கும் வேலைத்திட்டத்தின் முதற்கட்டம் முடிவடைந்துள்ளதாக கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் ரி.ரிஜியந்தன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில். அக்கராயன் விவசாயிகளின் முக்கிய கோரிக்கை தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளது. அக்கராயன் குளத்திலிருந்து மூன்று கிலோமீற்றர் வரையான ஆறு துப்புரவு செய்யப்பட்டுள்ளது. மிகுதி நான்கு கிலோ மீற்றர் வரையான ஆற்றினை குடமுருட்டி வரை துப்புரவு செய்வதற்கு மாவட்டச் செயலகத்தின் இடர் முகாமைத்துவப் பிரிவின் ஊடாக ரூபா.3.5 மில்லியன் நிதிக்கான திட்டங்கள் கையளிக்கப்பட்டுள்ளன. நிதி கிடைக்கும் நிலையில் அக்கராயன் ஆற்றினை முழுமையாக துப்புரவு செய்ய முடியும். தற்போது ஆறு துப்புரவு செய்யப்பட்டிருப்பதன் காரணமாக வயல் நிலங்களுக்குள் நீர் பரவுகின்ற நிலைமை மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

அக்கராயன் குளத்தின் பெருமளவிலான வெள்ளம் வான் பாய்கின்ற போதும் ஆறு வழியாக வெள்ளம் கடலினைச் சென்றடையக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அக்கராயன் ஆறு முழுமையாக துப்புரவு செய்யப்படும் போது பெருமளவு நன்மைகள் விவசாய முயற்சிகளுக்கு ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்



மட்டு. முகத்துவாரம் வெட்டப்படுவதனால்

# 5000 ஏக்கர் நெல் வயல்கள் அழிவை தடுக்க முடியும்

**கல்லடி குறூப் நிருபர்**



மட்டக்களப்பு முகத்துவாரத்தை வெட்டி வயற்காணிகளில் மேலதிகமாக தேங்கியுள்ள நீரினை வெளியேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் ஆற்று வெள்ளப் பெருக்கினால் வயற்காணிகளில் மேலதிகமான வெள்ளம் தேங்கியுள்ளதனால் மேலதிக நீரை வெளியேற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் தலைமையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆற்று வெள்ளம் பெருக்கெடுத்துள்ளதனால் 5000 ஏக்கருக்கு மேற்பட்ட வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் ஆற்றுவெள்ளத்தை அகற்றாவிடின் விவசாயிகள் பாரிய நட்டத்தினை எதிர்நோக்க வேண்டிய நிலையில் உள்ளனர் என மாவட்ட விவசாயிகள்

சி.சந்திரகாந்தனின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுக்கும்படி சிவநேசதுரை சந்திரகாந்தன் உரிய அதிகாரிகளுக்கு அன்றையதினம் பணித்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் கள விஜயங்களை மேற்கொண்டு இவ்விடயம் தொடர்பில் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு நேற்று (24) மட்டக்களப்பு முகத்துவாரப் பகுதிக்குச் சென்று முகத்துவாரத்தை வெட்டி வயற்காணிகளில் மேலதிகமாக தேங்கியுள்ள நீரினை வெளியேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வயற்காணிகளில் மேலதிகமாக தேங்கியுள்ள நீரினை வெளியேற்றாவிட்டால் 5000 ஏக்கருக்கு மேற்பட்ட நெல் வயல்களிலிருந்து அறுவடையினை பெற முடியாமல் போவதுடன் விவசாயிகள் பாரிய நட்டத்திற்கு முகங்கொடுக்க நேரிடும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

# திருகோணமலையில் எரிபொருட்களை பெறுவதற்கு புதிய நடைமுறை

**கிண்ணியா மத்திய நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலம் விநியோகிக்கப்படும் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட பொது முறைமையொன்று மாவட்டம் முழுவதும் அறிமுகப்படுத்தப்பட தீர்வு எட்டப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தெரிவித்தார்.

எரிபொருள் விநியோகத்தில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் விசேட கூட்டம் நேற்று (23) மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றபோதே இத்தீர்வு எட்டப்பட்டுள்ளது.

அதன்படி விரைவில் வாகனங்களின் வகைக்கேற்ப இந்த கூப்பன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

குறித்த எரிபொருள் கூப்பனானது உரிய பிரதேச செயலகங்கள் மூலம் விநியோகிக்கப்படும்.

இது குறித்து பிரதேச செயலகங்கள் மூலம் மக்களுக்கு அறிவுறுத்தப்படும். தற்போது எரிபொருள் பெறுகின்ற செயற்பாட்டில் சில நபர்கள் தேவைக்கதிகமாக வெளியில் உயர்விலைக்கு விற்பனை செய்யும் நோக்கில் எரிபொருளை தொடராக சேகரித்து வருகின்றனர்.

இதனால் வரிசை தொடராக நீண்டு கொண்டே செல்கின்றது. எரிபொருள் பெறுவதற்கு கூப்பன் முறைமை செயற்படுத்தப்படும்போது எரிபொருள் பெறுவதில் ஒழுங்குமுறை ஏதோ ஒரு வகையில் பின்பற்றப்படும். எனவே கூப்பன் முறையை செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தை இதன்போது கலந்து கொண்ட அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

# ஈ.பி.ஆர்.எல்.எப்பின் 32ஆவது தியாகிகள் தினம்

**வாச்சிக்குடா விஷேட நிருபர்**

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 32ஆவது தியாகிகள் தினம் நினைவேந்தல் நிகழ்வு அக்கரைப்பற்று பாவேந்தர் சனசமூக நிலைய மண்டபத்தில் (19) மாலை நடைபெற்றது.

முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் அக்கரைப்பற்று மண்ணின் மைந்தனும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முக்கியஸ்தருமான கே.சின்னையா தலைமையில் இடம்பெற்ற தியாகிகள் தின நினைவேந்தல் நிகழ்வில் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர்களான வி.ஜெயகோபன், ஏ.எம்.சலீம், முத்துலிங்கம் வரதராஜன் என பலரும் கலந்து கொண்டனர்.

நினைவேந்தல் நிகழ்வில் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது. தொடர்ந்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் பத்மநாபாவின் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் கட்சியின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

பின்னராக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் உள்ளிட்ட உயிர் நீத்த அனைத்து உறவுகள் சார்பாக ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

எரிப்பொருள் இன்மையால் காத்தான்குடியில்

## 400 பாதணி உற்பத்தி தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடியில் பாதணி உற்பத்தியாளர்களுக்கு எரிபொருள் வழங்கப்படாததால் அவர்களின் பாதணி உற்பத்தி தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பாதணி உற்பத்தி தொழிலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

காத்தான்குடி பாதணி உற்பத்தியாளர்களின் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் எம்.பி.எம்.பைசர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் மாத்திரம் 40க்கு மேற்பட்ட சிறியளவிலான மற்றும் பெரியளவிலான பாதணி உற்பத்தி நிலையங்கள் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் 400 பாதணி உற்பத்தி தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக காத்தான்குடி பிரதேச செயலாளரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன் அவர் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருடன் பேசி இதற்கு தீர்வை பெற்றுத்தருவதாக கூறியுள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களாக பாதணி உற்பத்தி நிலையங்கள் எரிபொருள் இல்லாததால் மூடப்பட்டுள்ளதுடன் மேலும் சில உற்பத்தி நிலையங்களும் மூடப்படும் நிலையிலுள்ளன.

இந்த நிலையில் எரி பொருளை பெற்றுத்தருமாறு நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.





கல்லடி டச்பார் பங்கின் சிற்றாலயமான கல்லடி புனித அந்தோனியார் ஆலய திருவிழா கொடியேற்றமானது நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்கு பங்குத்தந்தை இயேசு சபைத்துறவி அருட்பணி லோரன்ஸ் லோகநாதன் அடிகளார் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானதைத் தொடர்ந்து செபமாலையும், அதனைத் தொடர்ந்து முதலாவது நவநாள் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்பட்டது. படம்: புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

# மட்டு.மாவட்டத்தில் டெங்குநோய் படிப்படியாக குறைவடைவு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்குநோய் பரவல் தற்பொழுது படிப்படியாக குறைவடைந்து வருகின்றது. இதனடிப்படையில் கடந்த ஜூன் 11 ஆந் திகதி தொடக்கம் ஜூன் 17 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 20 பேர் டெங்குநோய் தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர்.

இந்தவாரம் டெங்குதாக்கத்தினால் பாதிப்புக்குள்ளான மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 6 நோயாளர்களும், ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 4 நோயாளர்களும், களுவாசிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3 நோயாளர்களும், செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு மற்றும் கோரளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா 2 நோயாளர்களும், பட்டிப்பளை, ஓட்டமாவடி, ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா 1 நோயாளருமாக மொத்தம் 20 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

இருப்பினும் காத்தான்குடி, வாழைச்சேனை, வவுணதீவு, வாகரை, வெல்லாவெளி, கிரான் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு நோயாளர்கள் எவரும் இனங்காணப்படவில்லை.

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ் வருடத்தில் இதுவரை 583 பேர் டெங்குநோய்த் தாக்கத்திற்குள்ளனதாகவும் இதுவரை மூவர் டெங்கு நோயினால் மரணமடைந்துள்ளதாகவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜீ. சுகுணன் மாவட்ட ஊடகப் பிரிவிற்கு தகவல் தெரிவித்துள்ளார்.

# உலக சூழல் தினத்தில் இறாலோடைக் கடற்கரையை சுத்தமாக்கும் பணிகள்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**



உலக சூழல் தினத்தை அமுலாக்கும் விதமாக மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இறாலோடைக் கடற்கரையோரமெங்கும் சுத்தமாக்கும் பணிகள் பிரதேச செயலாளர் ஜி. அருணன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீஎபெக்ற்), கொகாகோலா பவுண்டேஷன், இளைஞர் அபிவிருத்தி அகம் ஆகியவை கூட்டிணைந்து இந்த திட்டத்தை முன்னெடுத்துள்ளதாக இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் தங்கராஜா திலீப்குமார் தெரிவித்தார்.

பிரதேச மக்கள், மீனவர்கள் மற்றும் சூழல் நேய செயற்பாட்டாளர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் வியாழக்கிழமை கடற்கரை சுத்தமாக்கும் பணிகள் துவக்கி வைக்கப்பட்டன.

மேலும், சிறந்த மீன் வளத்தைக் கொண்டுள்ள மட்டக்களப்பு வாகரைப் பிரதேச கடல் வளம் பாதுகாக்கப்பட வேண்டும் கடலை மாசுபடுத்துவதில் குட்டித் தீவான இலங்கைத் தேசம் 10வது இடத்தைப் பிடித்திருக்கிறது என்பது கவலைக்குரிய விடயம். இதற்கு நாம் அனைவரும் பொறுப்புக் கூற வேண்டும். எங்களது செயற்பாடே எங்களது எதிர்காலமாக அமையும்" என அவர் தெரிவித்தார்.

# அட்டாளைச்சேனையில் உணவகங்கள் திடீர் பரிசோதனைக்கு

டாக்டர் ஏ.எம்.எம்.இஸ்மாயில் தெரிவிப்பு

**ஒலுவில் விசேட நிருபர்**



அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில், பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக, அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.எம்.எம். இஸ்மாயில் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள விசேட அறிவுறுத்தலுக்கமைய ஒருங்கிணைந்த சுகாதார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உணவகங்கள், உணவு கையாழும் நிலையங்கள், பேக்கரிகள் போன்றவை பரிசோதிக்கப்பட்டு உணவுப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வும் தரச்சான்றிதழ் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனைக்கமைய பொதுச் சுகாதார பரிசோதகர் குழுவினரால் உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள், பேக்கரிகள் என்பன திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

பரிசோதனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பாவனைக்குதவாத உணவுப் பண்டங்கள், பொருட்கள், காலவதியான பொருட்கள் என்பன கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் அதன் உரிமையாளருக்கெதிராக உணவு பாதுகாப்பு சட்டத்திட்டத்திற்கமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், குறித்த உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள் மூடப்படுமெனவும் தெரிவித்தார்.

பாம்பு தீண்டிய நபரை காப்பாற்றிய

# பொலிஸ் உத்தியோகத்தர் வெல்லாவெயில் சம்பவம்

**மண்டூர் நிருபர்**



வெல்லாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலையடிவட்டை பிரதேசத்தில் பாம்பு தீண்டி உயிரிருக்கு போராடிய வயோதிபரை காப்பாற்றிய சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவில் (23) இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாம்பு தீண்டி ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது பெண் செலுத்திச் சென்ற முச்சக்கரவண்டியில் எரிபொருள் இன்மையால் வீதியில் உயிருக்காக போராடிக் கொண்டிருந்த நபரை வெல்லாவெளி எரிபொருள் நிலையத்தில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் சம்பவத்தை நேரில் கண்டு பின்னர் தனது மோட்டார் சைக்கிளில் குறித்த நபரை ஏற்றிக்கொண்டு களுவாஞ்சிகுடி வைத்தியசாலையில் இரண்டு நிமிடங்களுக்கு முன்னர் அனுமதித்தனால் அவரின் உயிர் காப்பாற்றப்பட்டதாக அங்கு கடமையில் இருந்த வைத்தியர் தெரிவித்ததாக தெரியவந்துள்ளது.

வெல்லாவெளி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரான என்.எம்.கசீன் (PC92643) என்பவரே இந்த நபரின் உயிரை காப்பாற்றிவர் என்பது குறிப்பிடத்தக்கது அவரின் நற்செயலினை கண்டு நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் உத்தியோகத்தர்கள் பிரதேச வாசிகள் இவருக்கு பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர்.

பிள்ளைகளின் கல்வி விடயத்தில்

# பெற்றோர்கள் எச்சரிக்கையாகவும் விழிப்பாகவும் இருக்க வேண்டும்



**அட்டாளைச்சேனை குறூப் நிருபர்**

பெற்றோர்கள் தமது குழந்தைகளின் கல்வி விடயத்தில் மிகவும் எச்சரிக்கையாகவும் விழிப்பாகவும் இருக்கவேண்டும்.

இது போன்ற இளையோர்களை வலுவூட்டும் வதிவிட பயிற்சி நெறிகளில் அவர்களை முழுமையாகப் பங்குபற்ற ஊக்குவிக்க வேண்டும்.

இது அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு பெரும் துணையாக அமையும் என அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.முஹம்மத் அன்சார் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று மன்பஉல் ஹைராத் அரபிக் கல்லூரி அக்கரைப்பற்று பிரதேச செயலகத்துடன் இணைந்து நடாத்திய 'இளைஞர் யுவதிகளை வலுவூட்டும்' திட்டத்திற்கு அமைவாக ஒழுங்கு செய்யப்பட்ட பத்து நாள் வதிவிட செயலமர்வை பூர்த்திசெய்த மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் அரபிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பிரதேச செயலாளர் ரீ.எம். முஹம்மத் அன்சார். மேற்கண்டவாறு தெரிவித்தார்.




# பிட்ராத்மலை இந்திய பால்மா விநியோக மோசடி - உடன் நடவடிக்கை

ஹப்புதளை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிட்ராத்மலை தோட்டத்தில் இந்தியா அரசினால் நிவாரணமாக வழங்கப்பட்ட பால்மாவை பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டில் முறைக்கேடுகள் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இதற்கு எதிராக ஆளுநரின் செயலாளரிடம் உடனடியாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.

போக்குவரத்து செலவுக்கென பிரதேச சபையை சேர்ந்த சிலரால் 50 ரூபா பொதுமக்களிடம் அறவிடபடுகிறது.

இது தொடர்பில் பதுளை மாவட்ட செயலாளர் அப்புத்தளை பிரதேச செயலாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரிடம் விசாரணை அறிக்கையும் கோரியுள்ளார்.



இந்திய அரசினால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் உணவு ஆணைக்குழுவின் ஊடாக மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு அந்தந்த மாவட்டங்களில் தோட்ட நிர்வாகத்தின் ஊடாக மக்களை சென்றடைய இ.தொ.காவால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தியா அரசின் அனுசரணையில் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்களை இலங்கை துறைமுகத்திற்கு வந்தடையும் வரை தேவையான ஏற்பாடுகள் இந்திய அரசு வழங்கி இருந்தது. துறைமுகத்தில் இருந்து நிவாரணப் பொருட்களை விடுவித்து (clearness) ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிப்பதற்காக 400 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான செலவுகள் திறைசேரியின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிவாரணப் பொருட்கள் மக்களின் வீட்டு வாசல் வரை கொண்டு சேர்க்கப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் இலவசமாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதற்காக மேலதிகமாக நிதி வசூலித்தால் எவரும் கொடுக்க வேண்டாம் எனவும், அவ்வாறு நிதி வசூலிப்பவர்களுக்கு எதிராக பாரபட்சமின்றி கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

## விறகு தேடச் சென்றவர் தேயிலை மலையில் சடலமாக மீட்பு

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விக்ட்டன் மேற்பிரிவு தோட்டத்தில் நேற்று மாலை வேளையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. 42 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வீட்டுபாவனைக்கு விறகு தேடிச் சென்று மீண்டும் வீடு திரும்பாமையால் தோட்ட மக்கள் ஒன்று கூடி தேடிப் பார்த்த போது சடலத்தை கண்டுள்ளனர். இதனை யடுத்து வட்டவளை பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கினர். அதனை தொடர்ந்து வட்டவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இறந்த நபரின் சடலத்தை சென்று பார்வையிட்டனர். நேற்று ஹற்றன் நீதிமன்ற நீதிபதி சம்பவ இடத்திற்கு சென்று பார்த்த பின்னர் சடலம் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டு சட்ட வைத்திய அதிகாரியின் முன்னால் பிரேத பரிசோதனை மேற்கொள்ளவுள்ளதாக வட்டவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## காட்டு விலங்கு இறைச்சிகள் விற்பனை, அதிகாரிகள் தேடுதல்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

சரணாலயங்கள் மற்றும் காட்டுபகுதிகளில் வேட்டையாடி இறைச்சியாக்கப்பட்ட பிராணிகளின் இறைச்சி வகைகளை எம்பிலிப்பிட்டிய பகுதியில் பகிரங்கமாக விற்பனை செய்யப்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது. இப்பகுதியில் உடவளவ சரணாலயம் உட்பட பல காட்டுப்பகுதிகளில் வேட்டையாடிய விலங்குகள், பிராணிகளின் இறைச்சி வகைகள் பல உணவகங்கள் விற்கப்படுகின்றது.

## இரத்தினபுரி மாவட்ட பிரதான நகரங்களில் டெங்கு அபாயம்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்



இரத்தினபுரி மாவட்டத்தின் பிரதான நகரங்கள் உட்பட அண்மித்த பிரதேசங்களில் டெங்கு நோய் அவதானம் அதிகமாக காணப்படுவதாக இரத்தினபுரி மாவட்ட தொற்று நோய் பிரிவின் வைத்திய நிபுணர் அஜித் கோணார தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் டெங்கு நோய் அவதானம் அதிகரித்து வருவது குறித்த தகவல் குறிப்புக்களில் இத்தகவல்கள் வெளியாகியுள்ளன.

இம்மாவட்டத்தின் இரத்தினபுரி, பலாங்கொடை, எம்பிலிப்பிட்டி, குருவிட்ட, எலபாத்த சுகாதாரப் பிரிவுகளின் நகர மற்றும் சுற்றுப் பிரதேசங்களில் இந்நிலைமை அதிகமாக காணப்படுகிறது. இவ்விடயத்தில் பொது மக்களின் அவதானம் அதிகமாக தேவைப்படுவதாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொது மக்கள் இவ்விடயத்தில் தமது பொறுப்புக்கள் கடமைகளை நிறைவேற்றினால் மட்டுமே இதனை கட்டுப்படுத்த முடியும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## பசறை, சுகாதார பிரிவில் 19 டெங்கு நோயாளர்கள்

பதுளை தினகரன் விசேட நிருபர்

பசறை, சுகாதார பிரிவில் 19 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஜுன் முதலாம் திகதி முதல் 23ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பசறை நகர் பகுதியில் 17 டெங்கு நோயாளர்களும், ககட்டறுப்ப பகுதியில் இரண்டு நோயாளர்களுமாக மொத்தமாக 19 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதாரப்பரிசோதகர்களின் மேற்பார்வையாளர் எஸ். ஜெயகுமார் தெரிவித்தார். மேலும் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகளும் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் விழிப்புணர்வு வேலைத்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, சுகாதாரப் பரிசோதகர்களின் மேற்பார்வையாளர் குறிப்பிட்டார்.

## நுவரெலியா– பதுளை பிரதான வீதியில் விபத்து: இளைஞன், மட்டக்குதிரை படுகாயம்






நுவரெலியா பதுளை பிரதான வீதியில் நானுஓயா சந்திக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் மட்டக்குதிரையொன்றுக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளதுடன் இதில் பாதிக்கப்பட்ட இளைஞர் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நுவரெலியா ஸ்கிராப் தோட்ட பகுதியிலிருந்து நுவரெலியா நோக்கி பயணித்த முச்சக்கர வண்டி ஒன்றில் மட்டக்குதிரை ஒன்று பிரதான வீதியில் மோதுண்ட போதே விபத்து சம்பவித்துள்ளது. இச்சம்பவத்தில் வீதியில் ஓடிக்கொண்டிருந்த முச்சக்கர வண்டி இரண்டு மட்டக் குதிரைகள் நேருக்கு நேராக மோதுண்டுள்ளது.

முச்சக்கர வண்டியில் மோதுண்ட மட்டக்குதிரைக்கு முகப்பகுதியில் காயங்கள் ஏற்பட்டு மூக்கில் இரத்தம் வடிந்துள்ளமையால் குதிரையை மரமொன்றில் கயிற்றால் கட்டிவைத்துள்ளனர். அதேநேரத்தில் மட்டக்குதிரை முச்சக்கர வண்டியின் முற்பகுதியில் மோதுண்டதால் முச்சக்கர வண்டியின் முகப்பகுதி கண்ணாடி உடைந்து சேதத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் முச்சக்கர வண்டி ஓட்டுனரான ஊடகவியலாளர் ஒருவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டு நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கமநல நிலையத்தின் ஏற்பாட்டில் உணவு உற்பத்தி தொடர்பான செயலமர்வு





மாத்தளை சுழற்சி நிருபர்

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் உணவு பாதுகாப்பு குறித் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாத்தளை மாவட்டத்தில் கமநல சேவை பிரிவுகள் தோறும் மேலதிக உணவு பொருட்களை தயாரித்து சந்தைப்படுத்துவது தொடர்பாக செயலமர்வுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கமைய யடவத்த கமநல நிலையத்தினால் உணவு உற்பத்தியை நாமே உற்பத்தி செய்வோம் எனும் தொனிப்பொருளில் பயிற்சி செயலமர்வு ஒன்று நிககொள்ளை கிராமத்தில் (23) நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது பலாக்காயை பயன்படுத்தி உற்பத்தி செய்யக்கூடிய பல வகையான உணவு செயல்முறை பயிற்சி விவசாய அதிகாரிகளினால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. யடவத்த கமநல அதிகாரி அபேரத்ன, விவசாய ஆலோசகர்கள், உட்பட இப்பிரதேசத்தில் உள்ள மகளிர் அமைப்பைச் சேர்ந்த பலரும் கலந்துகொண்டனர்.

## திருட்டுபொருட்களுடன் தம்பதியினர் கைது

பதுளை தினகரன் விசேட நிருபர்

பதுளை, பஹலவத்தையில் 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான திருட்டுபொருட்களுடன் கணவனும் மனைவியும் பொலிஸாரால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

60 வயதுடைய கணவனும் அவரின் 57 வயதான மனைவியும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் வீடுகளை உடைத்து திருடப்பட்ட பொருட்களான சமையல் எரிவாயு சிலிண்டர்கள், சமையல் எரிவாயு அடுப்புகள்,மின்சார உபகரணங்கள், சங்கீத உபகரணங்கள், காலணிகள் உள்ளிட்ட பொருட்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

போதைக்கு அடிமையான இளைஞர் ஒருவரை பயன்படுத்தி, திருட்டுசம்பவங்களில் ஈடுபட்டு வந்துள்ளமை பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இதனுடன் தொடர்புடைய இளைஞரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

## டெம்மேரியா தோட்ட மக்களின் பிரச்சினைக்கு தீர்வு

இந்திய அரசால் வழங்கப்பட்டு வரும் நிவாரணப்பொருட்களுக்கு பசறை டெம்மேரியா தோட்ட முகாமையாளரால் போக்குவரத்து செலவுக்கென 50 ரூபாய் பணம் வசூலிக்கப்பட்டு வருவதாக இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டான் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அதனையடுத்து செந்தில் தொண்டமான் அவர்கள் தோட்ட நிர்வாக இயக்குனரை தொடர்பு கொண்டு வசூலிக்கப்பட்ட பணத்தை உடனடியாக அந்தந்த தோட்டத்தை சேர்ந்த மக்களிடம் திருப்பி வழங்குவதற்கான உடனடி நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





படம்: மடுல்சீமை, லுணுகலை நிருபர்கள்

பது/பசறை தமிழ் தேசிய பாடசாலையில் எழுந்தருளியிருக்கும் தேவி சரஸ்வதி அம்பாள் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி பூஜை நிகழ்வுகள் மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற்றது.




சர்வதேச யோக தினத்தை முன்னிட்டு கண்டியில் இயங்கும் பிரம்மகுமாரிகள் ராஜயோக நிலைய தியான நிகழ்வொன்றினை ஏற்பாடு செய்திருந்தது. கண்டி பொலிஸ் மைதானத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கண்டி உதவி இந்தியத் தூதுவர் டாக்டர் எஸ். ஆத்திரா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். படம்: அக்குறணை குறூப் நிருபர்

# புதுப்புனல்

ஷம்ஸ் பாஹிம்



## இவர்கள் யார்?

புன்னகைக்கும் வதனங்களில்
பளபளக்கும் பற்களோடு
ஒட்டியிருக்கும்
ஊத்தைப் பற்களைப்போல,

மனிதக்காடுகள் நிறைந்த
வெளியில்
மனக்கறைகளோடு
பருவம் பார்த்துப் பேசும்
தந்திர நரிகள்

இணைந்து இருக்கும்
இதயங்களை நிர்வாணப்படுத்தி
எரிநெருப்பின் குழம்புகளை
எப்படியோ
பருகிடக் கொடுத்துவிட்டு
பாதிகளாக்கி விடத் துடிக்கும்
பச்சோந்திக் கூட்டங்கள்

உயர்பவனை போற்றி
வலுக்கட்டாயச் சிலுவையில்
ஏற்றி
கீறல்களால் பயமுறுத்தி
ஆழக்குளிக்குள் புதைக்கும்
அர்த்தமில்லாத நடத்தைகள்

இளம் பிஞ்சுகளைக் கிள்ளிக்
காய்கனிகள் தரமுடியாத
பட்ட மரங்களாக்கி விட்டு
சேற்றினுள் சமாதிகட்டி
சேறு பூசி விடும்
பலியெடுக்கும் பாம்புகள்

பூக்களை முகர்ந்தபடியே
மணத்தினில் விருப்புற்று
அவைகளை உதிர்த்து
பாலியல் பைகளுக்குள்
கசக்கி விடும்
தோட்டத்துக் காவலாளிகள்

இருள் சூழ்ந்திருந்த
கருமுகில் வானில்,
மழையென அறிகுறிகள்
தெரிந்திருந்தும்
பார்வையற்ற குருடனை
நனைத்து விட வேண்டுமென்று
பார்த்தபடி நிற்கும் கழுகுகள்

மருத நிலத்தினில்
கிளை விட்ட மரங்களில்
தொங்கிக் கொண்டிருக்கும்
தூக்கணங் குருவிக் கூடுகளை
கழட்டி எடுத்துத்
துவம்சம் செய்யத் துடிக்கும்
மார்பு தட்டும் விவசாயிகள்

ஒளியில் ஒழிந்திருந்து
கும்மிருட்டு வேண்டி
அலறலொலியால் குரலெழுப்பும்
ஆந்தைகளை
வெளிச்சத்திற்கு கொண்டு வந்து
வேடிக்கை பார்க்கும்
பாவிகள்

மனிதாபிமானக் கோட்பாடென
வெண்ணிற மச்சுகங்களாய்
நின்று விட்டு
தக்கதொரு தருணமதில்
மீன்களைக் கொத்தும்
இவர்கள் யார்?

மனிதர்கள் தானோ?
இல்லையேல்
மனிதச் சாயலில் மந்தைகளா?
இல்லையெனில்
யார் இவர்கள்?

"ஏரூர்க்கவி"
எச்.எம்.எம்.றசீம்
கிழக்குப்பல்கலைக்கழகம்.



## எதுவும் இல்லை

உண்மை இல்லை
நீதி இல்லை
பணமும் இல்லை
குணமும் இல்லை

அரிசி இல்லை
சீனி இல்லை
மாவும் இல்லை
தீப்பெட்டியும் இல்லை

பெற்றோல் இல்லை
டிசல் இல்லை
கரண்டும் இல்லை
மண்ணெண்ணெய்யும் இல்லை

மனிதம் இல்லை
புனிதம் இல்லை
உறவும் இல்லை
உணர்வும் இல்லை

மருந்தும் இல்லை
வாகனமும் இல்லை
பருப்பும் இல்லை
அங்கரும் இல்லை

காகிதமும் இல்லை
படிப்பும் இல்லை
பாடசாலையும் இல்லை
வேலையும் இல்லை

ஜனநாயகம் இல்லை
சமத்துவம் இல்லை
உண்மை இல்லை
ஆட்சியும் இல்லை

இரக்கம் இல்லை
உறக்கம் இல்லை
உரமும் இல்லை
உணவும் இல்லை

காடும் இல்லை
வீடும் இல்லை
வாழ்வும் இல்லை
எதுவும் இல்லை
நாட்டில் இல்லை

பாரதி மைந்தன்
மந்துவில்
புதுக்குடியிருப்பு



## சேற்றில் ஒன்று கிணற்றில் ஒன்று...!!

அன்று
வித்தியா வித்தியா என்று
விடிய விடிய கத்தினோம்
ஆஷிபா வந்ததும் அதை அடியோடு
மறந்து விட்டோம்..!!

நாளும் போக நாங்களும் மறந்தாச்சி
நாசமா போனவனுகளும்
நாளுக்கு நாள் வளர்ந்தாச்சி....!!

இன்று
அட்டுலுகமவில்
சேற்றிலும்
வவுனியாவில்
கிணற்றிலும்
சடலங்களாக மீட்க
சங்கடமாய் இருக்குது மனசு...!!

பேதைகள் எல்லாம்
போதைக்கு இறையா இங்கே
மேதைகள் எல்லாம்
அநீதியின் விலையா..??

நாட்டுக்கு நாங்கள்
தொல்லையாகிப் போனதனாலா
கொலைகளும், கொள்ளைகளும்
விலைகளின் கூடவே
விரைவாக உயருது...??

குற்றங்களை குறைப்பதென்றால்
தண்டனைகளை கடுமையாக்கு...!!

பாலைக்கவிஞன் அஜ்மல்

அலங்கார தோரணங்களால்
காற்று மண்டலத்தில்
கவிதை சிலைகளை
அமரவைத்து அழகு பார்க்கும்
நந்தவன தேர்

புத்தகத் தீவுகளில்
அடிமைகளாகிக் கிடந்த வரிகளை
விடுதலையாக்கி
தென்றல் சாகர வீதிகளின் வழியே
கரையேற்றும் படகு.

துயிலும் வாத்தியங்களின்
தூக்கம் களைகையில்
எழும்பும் ஈனஸ்வரங்கள்

வாத்திய கிளைகளில்
அமர்ந்திருக்கும்
உருவமில்லா பறவைகள்
இசைவேடர்களின்
விரலம்புகள் பட்டதும்
சிறகடித்து பறந்து மனித மரத்து
செவிக்கூட்டுக்குள் ஒளிந்துகொள்கின்றன

கவிதை நிலவுக்கு
வானவில்லை அணிவித்து
தென்றலின் வீதியில்
ஊர்வலம்போகும்
மின்மினிகள்
அடங்காத இதயத்தையும்
அடக்கிக் கட்டிப்போடும்
அன்புமிக்க காதலி தன் .
கவிதைக் காதலனை கரம்பிடித்து
முன்னால் அவன் செல்ல
பின்னால் நாணிச் செல்லும்
புதுப்பெண்ணாய் ஊர்வலம் போனவை
நேற்றைய காற்றுகளில்
கவிதைகள் சாப்பிட்டு
ஏப்பம்விடும் முதலைகளாய் இன்றுகளில்

தன்னுடைய மழையில்
கவிதைகள் நனையாமல்
குடைபிடித்த இசைமேகம்
தன்னால் நனைந்த இதயங்களில்
சுரமாய் இருந்தபோதும்
ஜுரமாய் இருந்ததில்லை

நவீனத்துவத்துள் புகுந்த
ஆரவாரங்களால்
ஆர்ப்பாட்டங்களின்
அழகிய வாள்கொண்டு
கவிதா விலாசத்தின் கழுத்தறுதக்கும்
வாத்திய கருவிகளிலாலான
கசாப்புக் கடை

தொலைந்து போவதற்கான
துணிச்சல்களுடன்
திருவிழாவுக்குச் செல்லும்
குழந்தையாய்
எழுதப்படுகின்ற வரிகளுக்கு
இரைச்சல்களால் இரதமிழுக்கும்
இசைக்கரங்கள் அறிவதில்லை
மாற்றங்களால் ஏற்படப்போகும்
ஏமாற்றங்கள்..

கவிதை காதலியை கரம்பிடித்து
காலங்கள் தாண்டி வாழவேண்டிய
இசைக்கணவன்
இம்சை கணவனாகுவதில்
தீர்க்க சுமங்கலியாதலான
பாடலின் வாழ்க்கை
விவாகரத்துக்களில் முடியும்
விவகாரங்களுக்குள் முடிகின்றன ..

ஒலிகள் இல்லா உலகில்
ஜனிப்பதற்கான ஆசைகளுக்கு
உயிரூட்டும் பிரம்மத்துவத்தால்
இசைகளாய் பிறப்பெடுத்து
மரணிக்கின்ற பாடல்களுக்கு



## இசை

சவப்பெட்டியாகி
செவிகளுள் நல்லடக்கம் காணும்
சமகால சங்கீதத்தின் ஆத்மா
ஆவியாய் அலைகின்ற வானத்தில்
இதயத்தை வருடும் எளிய ரீங்காரம்
தென்றலில் தவழ்வதற்கான சாத்தியம்
நடைமுறைகளில் சாத்தியமான பூகம்பமாய்...

தன்னுடைய சாகரத்திலிருந்து
முத்துக்களும்
முன்பின்னறியா வண்ண வண்ண
மீன்களுமென அள்ளித்தந்த
அட்சய பாத்திரம்
பிச்சைக்காரனின் தெருவோடாகியதில்
பெய்யும் கண்ணீர் மழைக்கு
உப்பாகி போனது மிக
தப்பாகிப் போனதே.

புதைந்து போனதை தோண்டும்
அகல்வாராச்சிகளில் எங்கேனும்
ஒரு பூங்காற்று புறப்படும் என்னும்
நம்பிக்கைகள் தாங்கி இருப்பதால்தான்
நாளைய ரசனைக்காய் செவிகளோடு
பிறக்கின்ற குழந்தைகளுக்காக இனியும்
தேன் சிந்துமோ வானம் ?

மெய்யன் நடராஜ்

## ஆலம் விதையாக விழுந்தீ ஆசானே!

ஆசிரியத்துவம்......
வெறும் தொழிலல்ல அது ஒரு
பெருந்தொண்டு!
சமூக மாற்றங்கள்
தருவிக்கும்
கருவி!
எதிர்பார்ப்புகள்
இல்லா
அரும்பணி!
ஆசான்களே...
உங்களின் ஒரு விதையில்
ஓராயிரம் ஞான நந்தவனங்கள்
உருவாகும்!
மாணவர் ஏற மட்டும்
உதவும் ஏணி நீங்கள்...
மாணவரின்
மற்றுமோர் பெற்றோர்
ஆகினீர்கள்...
பாடப்புத்தகங்கள் மட்டுமல்ல
உங்கள் பணி..
உலக உண்மைகளை
ஒருசேரக்கொடுப்பதுவே
உங்கள் பணி!
வரலாறுகளை உருவாக்கும்
உந்துசக்தி நீங்கள்...
அறவழியை அன்புடனேவும்
ஏவுகணைகளும் நீங்கள்!
வாழ்வியலின்
அடிப்படைத்தேவை நீங்கள்...
அறிவியலும் உளவியலும்
ஒன்று சேர்ந்த
ஔடதம் நீங்கள்!
மாணவர்க்கு நம்பிக்கையுரம் தந்து
அவர்களின் அறிவுக்கண்களைத்
திறக்கும் திறவுகோல்கள்
நீங்கள்!
சமூகச்சிகிச்சை செய்யும்
சிறந்த வைத்தியர் நீங்கள்...
நாகரிக முன்னேற்றத்திற்கான
நாயகர்களும் நீங்கள்!
பெற்றோர் உலகிற்கீந்த குழந்தைக்கு
அந்த உலகையே பரிசாய்
வழங்குபவர் நீங்கள்...
போதனைகள் மூலம்
சாதனைபடைத்தவர் நீங்கள்...
விழுமியங்கள் பேணும் ஆலம்
விழுது நீங்கள்!
வெண்கட்டி எடுத்து அறியாமையிருளுக்கு
வெள்ளை பூசியவர் நீங்கள்
ஈரமான போதிமரங்கள் நீங்கள்
உங்கள் ஞானம் பெற்றுப்
பறந்த பறவைகள் எத்தனை?
அறிவுப்புதையல் நீங்கள்...
அள்ள அள்ளக் குறையாச்
செல்வமும் நீங்கள்!
மனிதனை மனிதனாக்கும்
மாமனிதர் நீங்கள்....
அர்ப்பணிப்பும்
அக்கறையும் உங்களிரு கண்கள்!
தேசத்தை வாகாய் வடிவமைப்பவர்
நீங்கள்...
தேசஎல்லை கடந்து
உலக உணர்வை வளர்ப்பவர் நீங்கள்!
நீங்கள் இல்லாத கல்வி...
ஆன்மா இல்லாத உயிர்!
உயிர் இல்லாத உடல்!
ஞான ஒளி ஏற்றும்
தீபங்கள் நீங்கள்...
சிந்தனையைக்கிளறி விடும்
சீர்திருத்தவாதிகள் நீங்கள்!
சமூகப்பொறியாளர் நீங்கள்...
சமூக முன்னோடியும் நீங்கள்!
களநிபுணர் நீங்கள்...
காவல்காக்கும் தோட்டக்காரரும் நீங்கள்!
உங்கள் சேவை ....
நாட்டின் அத்தியாவசியத்தேவை!
வாழ்க வளமுடன்....
வளர்க பணிப்பற்றுடன்!

ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்



## என் அப்பாக்களே..

ஒவ்வொரு விடியலும்
உன் தோள் சுமை
கனக்க வைத்தே விடியிதே...
என் அன்பின் தந்தையே...!

எத்தனை முயற்சிகளை செய்து விட்டேன்
உன் தோளில் கனத்தை இறக்க
ஆனால்
அதற்கான தருணம் இன்னும் இல்லை..
என் அன்புத் தந்தையே...!
காலை கதிரவன் விழிக்கும் முன்
வெளியேறும் பறவைபோல்;
எங்களுக்கான தேவைகளை
செய்ய வேண்டும் என பறக்கிறாய்...!
ஒவ்வொரு நாளும்..

காலம் ஓடி விட்டது
கறைபடிந்த உடன்
வேலை செய்யும் நாளும்
வெகு சீக்கிரம் மாறிவிடும்...
என் அன்புத் தந்தையே...!
வெளி உலகம் உன்னை
வேதனைப்படுத்தி விட்டது.
வீணான வார்த்தைகளை பேசி..
கூட பிறந்தவர்களே
வேற்றுமை படுத்தி விட்டன

உந்தன் 'அமைதியினாலும்
நமது எளிமையினாலும்'
வேண்டுமென்ற உறவெல்லாம்
வேண்டாத உறவாய் மாறிவிட்டன
இத்தனையும் அழகான
அமைதியாய் கடக்கிறாய்
கவலை கொள்ளாதே...!
என் அன்புத் தந்தையே...!
' இயலாமை' என்று வந்தால்
'இரும்பாய்' நின்று
நாங்கள் தாங்குவோம்...
'கோழை' என்று சொன்னவர்களை
கொடுக்கும் கரம் கொண்டு
நாங்கள் தூக்குவோம்...
உன்னை வேதனைப்படுத்தியவர்களுக்கு பதிலாய்
"வாழ்க்கை வளமுடன்" வாழ்ந்து தலைதூக்கும்...
என் அன்புத் தந்தையே...!
கவலை கொள்ளாதே
வெற்றுப் பூமியை நிரப்பி நிற்கும்
கட்டடம் போல்; எமது நிலமை
சீக்கிரமே நிறைந்த உயர்வுடன்...
"குறைவின்றிய வளங்களுடம்" பார்ப்பவர்
அதிசயிக்கும் அளவு மாறிடுமே...
கவலை கொள்ளாதே
என் அன்புத் தந்தையே...!

மண்ணின் ராணி
சிகானா உமர்லெப்பை
ஏறாவூர்

# நகர்வலம்



# மேல் மாகாணத்தில் 1050 டெங்கு நோயாளர்கள் இனம்காணல்

**வட கொழும்பு தினகன் நிருபர்**

மேல் மாகாணத்தின் கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களில் கடந்த மே மாதம் இறுதி வரையான கால எல்லைக்குள் 1050 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

காய்ச்சல் உடல் உபாதைகள் ஏற்படும் பட்சத்தில் காலம் தாழ்த்தாது உடனடியாக மருத்துவமனையை நாடி சிகிச்சைப் பெறுமாறு சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளர்.

உடனடி சிகிச்சைபெறுவதன் மூலம் நோய் அறகுறிகளையும் அந்நோயாளிக்கான வைத்திய பரிசோதனைகளையும் மேற்கொள்ள ஏதுவாக இருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெங்கு நுளம்பு பெருக்கம் ஏற்படாத வகையில் மக்கள் தங்களின் சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்பதுடன், நீர் தேங்கும் வகையில் சிரட்டை, போத்தல்கள், டயர் வகைகளை அப்புறப்படுத்துவதுடன் குழிகளை மூடிவிடுமாறும், கூரை வடிகான்களை சுத்தமாக வைத்திருக்குமாறும் குளிர்சாதனப் பெட்டிகளில் நீர் தேங்கி இருக்காது சுத்தப்படுத்துமாறும் தெரிவித்துள்ளது.

குறிப்பாக வணக்கஸ்தலங்கள், அரச அலுவலகங்கள், தொழிற்சாலைகள், பாடசாலைகள், ஹோட்டல்கள் என மக்கள் அதிகமாக கூடும் பிரதான இடங்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தியுள்ளது.

# புத்தளத்தில் முக்கூட்டு தலைமையின் போதை ஒழிப்பு செயற்திட்டம்

**புத்தளம் தினகரன் நிருபர்**

தற்போது நாட்டில் பாரிய பிரச்சினையாக உருவெடுத்திருக்கும் போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்கான பாரிய வேலைத்திட்டங்களை, புத்தளம் நகரசபை, பெரிய பள்ளி, ஜம்இய்யதுல் உலமா, பாதுகாப்பு தரப்புக்கள், சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து முன்னெடுக்கவுள்ளன.

இவ்வேலைத்திட்டம் சம்பந்தமான கலந்துரையாடல் (20) புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் தலைமையில் நகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.



புத்தளம் கே.ஏ.பாயிஸ் ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இது சம்பந்தமான விழிப்புணர்வு செயற்திட்டமொன்றை நடாத்தத் தீர்மானிக்கப்பட்டு அதற்கான பணிகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் நகரசபை உறுப்பினர் ரனீஸ் பதூர்தீன், உலமாக்கள் உள்ளிட்ட மற்றும் பல தரப்பினரும் கலந்துகொண்டனர்.











சீனன்கோட்டை ஜாமிஅதுல் பாஸிய்யா கலாபீட 4ஆம், 5ஆம் தலைப்பாகை சூடும் நிகழ்வு சீனன்கோட்டை பாஸியா பெரிய பள்ளிவாசலில் அண்மையில் நடைபெற்றது. 131ஆவது வருட மனாகிபுஷ் ஷாதுலி தமாம் மஜ்லிஸும் இடம்பெற்றது. கலாபீட பணிப்பாளர் முகத்தமுஷ் ஷாதுலி மௌலவி அல்ஹாஜ் பஸ்லான் அஷ்ரபியின் நெறிப்படுத்தலில் பள்ளி சங்க தலைவர் முக்தார் ஹாஜியார், இணைச் செயலாளர் சிஹாப் ஹாஜியார், கலாபீட தலைவர் சட்டத்தரணி ஹம்ஸா ஹாஜியார், கலாபீட ஸ்தாபக பொருளாளர் அதாவுள்ளாஹ் ஹாஜியார் ஆகியோர் முன்னிலையில் இந்நிகழ்வு இடம் பெற்றது. கலீபதுஷ் ஷாதுலி அஸ்ஸெய்யித் அல்ஹாஜ் அலவி மவ்லானா (முர்ஸி), மாத்தறை மின்னதுல் பாஸிய்யா அரபுக் கல்லூரி அதிபர் உஸ்தாத் கலீபதுஷ் ஷாதுலி இஸ்திகார் (பாரி), கலீபதுஷ் ஷாதுலி ரபீக் (பஹ்ஜி), கலீபதுஷ் ஷாதுலி பைரூஸ் (பஹ்ஜி), காலி பஹ்ஜதுல் இப்ராஹிமிய்யா அரபுக் கல்லூரி அதிபர் உஸ்தாத் மவ்லவி ரஸ்'க் (பஹ்ஜி), வெலிகம கப்புவத்த ரிபாயியா அரபுக் கல்லூரி அதிபர் உஸ்தாத் மவ்லவி அல்ஹாஜ் அப்துல்லாஹ் (ரவ்ழி), காலி மக்கிய்யா அரபுக் கல்லூரி உப அதிபர் உஸ்தாத் ரயீஸுத்தீன் (மக்கி), வெலிகம முர்ஸிய்யா அரபுல் கல்லூரி உப அதிபர் உஸ்தாத் மவ்லவி முகத்தமுஷ் ஷாதுலி அஸ்கீன் (முர்ஸி), கலாபீட அதிபர் உஸ்தாத் ராஸிக் (முய்யிதி) ஆகியோர் மாணவர்களுக்கு தலைப்பாகை அணிவித்தார்கள். பேருவளை நகரபிதா மஸாஹிம் முஹம்மத், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எம்.எம்.எம். அம்ஜாத் உட்பட பள்ளிச்சங்க உறுப்பினர்கள், சீனன்கோட்டை ஜாமிஅதுல் பாஸிய்யா கலாபீட உறுப்பினர்கள், உலமாக்கள், இஹ்வான்கள் நிகழ்வில் பங்குபற்றினர்.

(படங்கள்: பேருவளை குறூப் நிருபர் )

# அநுராதபுரத்தில் கோர விபத்து

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

திருகோணமலையிலிருந்து புத்தளம் பகுதிக்கு நிலக்கரி எடுத்துச் சென்ற பைமோர் கனரக வாகனமொன்று மோதி இடம்பெற்ற கோர விபத்தில் 19 வயதுடைய இளைஞனொருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் அநுராதபுரம் பிரதான வீதியின் பண்டுளகம ஆரியவங்ச விஹாரைக்கு முன்னால் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் போக்குவரத்து பொலிஸார் குறிப்பிட்டனர். தலாகொளவெவ, கிரளோகம, தமுத்தேகம பகுதியை வசிப்பிடமாக கொண்ட 19 வயதுடைய நிமல் பண்டாரகே ரவிசான் மதுரங்க எனப்படும் இளைஞனே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரிய வந்துள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது. எரிபொருளினை பெற்றுக் கொள்வதற்காக வேண்டி வரிசையில் நின்று கொண்டிருந்த இளைஞன் மீது கனரக வாகனம் மோதியதில் இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளமை மேலும் தெரியவந்துள்ளது. விபத்தில் உயிரிழந்த இளைஞனின் சடலம் அநுராதபுரம் போதனா வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்துடன் தொடர்புடைய வாகன சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# வடமத்திய மாகாண ஒலி ஊனமுற்றோர் சங்கத்தின் அநுராதபுர மாவட்ட தேர்தல்



**திறப்பனை தினகரன் நிருபர்**

வட மத்திய மாகாண ஒலி ஊனமுற்றோர் சங்கத்தின் அநுராதபுர மாவட்ட தேர்தல் அண்மையில் அநுராதபுரத்தில் நடைபெற்றது. இதன்போது அநுராதபுரம் மாவட்ட மேலதிக செயலாளர் விஜய வனசிங்க இதில் கலந்து கொண்டு இவ்வாறு தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் சமூகத்தின் பங்குதாரர்கள் நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் பொறுப்பும் உரிமையும் இவர்களுக்கும் உண்டு. இவர்கள் அனைவரினதும் பிரச்சினைகள் குறித்து நாம் விவாதிக்க சமூக சேவை அதிகாரிகள் மற்றும் மொழி பெயர்ப்பாளருடன் மாதம் ஒரு முறையாவது கலந்துரையாடல் ஒன்றை நடாத்த வேண்டும். இதில் தொடர்பாடல் தடைகளை மீறி நம்பகமான சேவையை வழங்குவதற்கு சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கு சைகை மொழியை பயிற்றுவிக்கவுள்ளதாகவும், பயிர்ச்செய்கை, சுயதொழில், வியாபாரம் போன்ற பல்வேறு பொருளாதார நன்மைகளைக் கொண்ட திட்டங்களுக்கு இம் மக்களை ஈடுபடுத்த முடியும் என அநுராதபுரம் மேலதிக மாவட்ட செயலாளர் விஜய வனசிங்க இதன்போது தெரிவித்தார்.

இலங்கை செவித்திறன் குறைபாடுள்ளோர் மத்திய சம்மேளனத்தின் தலைவர் பிரையன் சுசந்த உரையாற்றுகையில், காது கேளாதோர் சமூக ஊடகங்களை தடைகளை மீறி எச்சரிக்கையுடன் தமது தனியுரிமையை பாதுகாக்கும் வகையில் பயன்படுத்துவது அவசியம் எனவும் நாம் பல்வேறு துறைகளிலும் வெற்றி பெற முயற்சிக்க வேண்டும் எனவும் இதன்போது தெரிவித்தார்.

# மட்டக்குளி முச்சக்கர சாரதிகள் சங்கம் உலர் உணவுப் பொதி வழங்கல்

**வட கொழும்பு தினகரன் நிருபர்**

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் மக்கள் பல்வேறு வகைகளிலும் பெரும் நெருக்கடியுடன் வாழ்கின்றனர். இவ்வாறான நிலைமையில் மட்டக்குளி ஐக்கிய முச்சக்கர சாரதிகள் சங்கம் இனம், மதம், மொழி பாராது அனைத்து மக்களுக்கும் உலர் உணவுப் பொதிகளை வழங்கியமை பெரும் புண்ணியமான செயலாகும். இந்நிகழ்வு எமது நாட்டின் அனைவருக்கும் சமூக ஒற்றுமைக்கான உதாரணமுமாகும் என மௌலவி பாரூட் பாரூக் தெரிவித்தார்.

கொழும்பு மட்டக்குளி பேர்குசன் வீதியில் இயங்கும் மட்டக்குளி முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கம், 13ஆவது வருடமாக பொசன் பௌர்ணமி தினத்தன்று இப்பிரதேச வறிய மக்களுக்கு உலர் உணவு பொதிகளை வழங்கியது. இவ் வைபவத்தில் விசேட அதிதியாக கலந்து கொண்ட கொழும்பு 12 இசானிய்யா அரபிக் கல்லூரியின் உப அதிபர் மௌவி பரூட் பாரூக் விசேட உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில், இன்று நாட்டில் எரிவாயு, எரிபொருட்கள், மண்ணெண்ணெய் தட்டுப்பாடு நிலவுவதுடன் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. உணவுத் தட்டுப்பாடும் நிலவுகிறது. மக்களின் பசியைத் தீர்ப்பதற்காக இன்று இச்சங்கம் இனம், மதம், மொழி வேறுபாடுகளை எல்லாம் துறந்து அனைவரையும் ஒரு தாய் மக்களாக பார்வையை செலுத்தி அனைவருக்கும் உலர் உணவுப் பொருட்களை வழங்க முன் வந்துள்ளது. மக்கள் மத்தியில் பெரும் கஷ்டம் நிலவும் நிலையில் இக் காரியம் பெரும் பயனைக் கொண்டதாகும்.

கஷ்டமான, துன்பமான நிலையில் வாழும் மக்களுக்கு வழங்கும் இவ் உதவியை இறைவன் அங்கீகரிப்பான். இச் சங்கமானது பல தனவந்தர்களின் உதவியுடன் பதின்மூன்றாவது வருடமாக இன்றைய நிகழ்வை நடாத்துகிறது. மக்கள் கஷ்டப்படுகையில் உதவுவது மனித நேயமாகும். இன்று இச் சங்கம் முன்னெடுக்கும் இந்நிகழ்வானது பலருக்கும் நல்லதோர் உதாரணமாகும்.

நாம் அனைவரும் இலங்கையர் என்ற உணர்வுடன் அனைத்து இனத்தவரையும் இணைத்து ஐக்கியமாக பொசன் தினத்தில் இப்புண்ணிய செயல் நடத்தப்பட்டது. இச் சங்கம் நாடு மிக சிக்கலான நிலையில் காணப்படும் தருணத்தில் உலர் உணவுப் பொதியை வழங்குகிறது. இதனால் பலரின் பசி நீங்குகிறது. இதை பலரும் உணர வேண்டும். பலரும் மக்களுக்கு உதவ முன்வர வேண்டும்.

அனைவரும் இன நல்லிணக்கத்துடன் வாழ்வோம். எல்லா கஷ்டங்களும், துன்பங்களும் நீங்க வேண்டும். நாடு செழிப்புடன் மக்கள் சௌபாக்கியத்துடன் வாழ இறைவனிடம் அனைவரும் பிரார்த்திப்போம் எனவும் தெரிவித்தார்.



புத்தளம், பளிச்சாக்குளம் கிராமத்தில் உள்ள எரிபொருள் நிலையம் புதன்கிழமை (22) நீண்ட வரிசையில், மக்கள் தமது எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக முண்டியடித்துக் கொண்டிருந்த போது பிடிக்கப்பட்ட படங்களாகும். உடப்பு குறூப் நிருபர்

# பாலத்துறை சந்தையில் பலாக்காய் விற்பனை அதிகரிப்பு

**வடகொழும்பு தினகரன் நிருபர்**

கொழும்பு மட்டக்குளி பாலத்துறை சந்தையில் தற்போது பலாக்காய் விற்பனை அதிகரித்துள்ளது. மரக்கறி வகைகளின் விலையேற்றம் காரணமாக மக்கள் பொலஸ் எனப்படும் பலாக்காய் வகைகளை சமையலுக்காக கொள்முதல் செய்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

அரிசி, கோதுமை மா விலையேற்றத்தினால் மக்கள் பலாக்காய் வகைககளை உணவாக பாவிக்கத் தொடங்கியுள்ளனர்.

ஈரப்பலாக்காய் ஐம்பது ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டிருந்த நிலையில் எரிபொருள் தட்டுப்பாட்டால் வெளியூர் வர்த்தகர்களால் மரக்கறி வகைகள் பாலத்துறை சந்தைக்கு விற்பனைக்கு வருவது வெகுவாக குறைந்துவிட்டது.

இதன் காரணமாக ஈரப்பலாக்கை 100 ரூபாய் முதல் 150 ரூபாய் விலை அதிகரித்துள்ளது.

பொலஸ் எனப்படும் பலாக்காய் இருபத்தைந்து சுளைகள் ஐம்பது ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது பதினைந்து சுளைகள் நூற்றி இருபத்தைந்து ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

அரிசி, கோதுமைமா விலையேற்றத்தினால் மக்கள் பலா சுளை மற்றும் ஈரப்பலாக்காய் மூலமும் ரொட்டி வடை உள்ளிட்ட பல்வேறு உணவு வகைகள் தயாரித்து வருகின்றனர்.

இந்நிலையில் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் பாலத்துறை சந்தையில் விறகின் விலையும் அதிகரித்துள்ளது. ஒரு அடி நீளம் கொண்ட பத்து விறகு துண்டு கட்டு முப்பத்தைந்து ரூபாய்க்கு விற்பனையாகியது. தற்போது எட்டு விறகு துண்டு கட்டு ஒன்றின் விலை ஐம்பது ரூபாவாக உயர்வடைந்துள்ளது.

# அலகப்பெருமாகம கிராமத்தின் நீண்ட நாள் தேவை பூர்த்தி





அநுராதபுர மாவட்ட கலாவெவ தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள அழகப்பெருமாகம கிராமத்தின் நீண்ட நாள் தேவையாகவிருந்த ஜும்மாப் பள்ளிக்கான புதிய வுழூச் செய்யும் பகுதி முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர், நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் ஏ.ஆர். வசீம் எடுத்த துரித முயற்சியால் Global Ehshan Relief நிறுவனத்தின் மூலம் வுழு செய்யும் பகுதி புணரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் அழகப்பெருமாகம ஜும்மாப் பள்ளிக்கான புதிய வுழூச் செய்யும் பகுதி மக்களின் பயன்பாட்டுக்கு வழங்கிவைக்கப்பட்ட நிகழ்வில் ஒருங்கிணைப்பாளர் ஏ.ஆர். வசீம் உட்பட பள்ளி நிறுவாகிகள்,பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

படம்: திறப்பனை தினகரன் நிருபர்



5 ஆவது ஒருநாள் போட்டி

# அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுகளால் வெற்றி

இலங்கை-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்தாவதும் இறுதியுமான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. இப்போட்டி கொழும்பு கெத்தாராம சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 43.1 ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 160 ஓட்டங்கள் பெற்றது. அதிக பட்சமாக சமிக கருணாரட்ன 75 பந்துகளில் 8 பௌண்டரி, 2 சிக்ஸர் அடங்கலாக 75 ஓட்டங்கள் பெற்றார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 39.3 ஓவரில் 164 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. இதில் தொடரை இலங்கை அணி 3-2 என்ற விகிதத்தில் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

**முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி**

இலங்கை அணிக்கு மீண்டும் அழைக்கப்பட்ட தனுஷ்க குணதிலக்க 8 ஓட்டங்களையும் பெத்தும் நிசங்க 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க இலங்கை அணிக்கு நம்பிக்கை நட்சத்திரமாக ஆடுவார் என ஆடிய குசல் மெண்டிஸ் 26 ஓட்டங்கள் பெற்றிருந்த வேளை கிட் விக்கெட் முறையில் ஆட்டமிழந்து சென்றார். பின்னர் நீண்ட இடைவேளையின் பின்னர் அணிக்கு அழைக்கப்பட்ட தினேஷ் சந்திமால் அவரும் வந்த வேகத்தில் 6 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க பின்னர் அணியின் தலைவர் தசுன் சானக்க ஒரு ஓட்டத்துடனும் துனித் வெலலாலகே 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பின்னர் இணைந்தார் சாமிக்க கருணரத்தன அவருடன் இணைந்தார் ஜெப்ரி வென்டர்சே அவரும் வந்த வேகத்தில் 4 ஓட்டங்கள் பெற்றிருந்த வெளை ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்து சென்றார்.பின்னர் இன்று தனது கன்னி போட்டி வரத்தை பெற்ற பிரமோத் மதுசான் அவரும் சமிக்க கருணாரத்னவும் 8 ஆவது விக்கெட்டுக்காக 58 ஓட்டங்கள் குவித்திருந்த வேளை மதுசான் 15 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து சென்றார். பின்னர் இணைந்தார் கருணாரத்னவுடன தீக்ஷன இணைந்தார்.அவரும் நன்றாக ஆடிய வேளை பின்வரிசையில் இலங்கை அணிக்கு நம்பிக்கை நட்சத்திரமாக ஆடிய கருணாரத்ன 75 பந்துகளை எதிர்கொண்டு 8 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 75 ஓட்டங்கள் பெற்ற வேளை ஆட்டிழந்து சென்றார். இது அவரது அதிகூடிய ஓட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை 43.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 160 ஓட்டங்களை பெற்றது. தீக்ஷன இரண்டு ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். பந்து வீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக ஹேசல்வூட், மெத்திவ் குன்மேன்,பட்கமின்ஸ், தலா இரண்டு விக்கெட்டையும் மெக்ஸ்வெல், கமரூன் கிரீன் தலா ஒரு விக்கெட்டையும் பதம் பார்த்தனர்.

காயம் காரணமாக கடந்த இரண்டு போட்டிகளில் விளையாடாத தனுஷ்க குணதிலக மற்றும் தினேஷ் சந்திமால் அணியில் இணைக்கபட்ட அதே நேரம் வேகப்பந்து வீச்சாளர் பிரமோத் மதுஷான் ஒருநாள் போட்டியில் அறிமுகமானார். இலங்கை அணிக்காக ஒருநாள் போட்டியில் அறிமுகம் பெற்ற 205 ஆவது வீரர் என்ற பெருமையை மதுஷன் பெற்றார். இரு அணிகள் இடையிலான ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் ஆரம்பமானது.



போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் தசுன் ஷானக்க முதலில் துடுப்பாட்டத்தினை தேர்வு செய்தார். இப்போட்டிக்கான இலங்கை அணியில் மூன்று மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்படி தினேஷ் சந்திமால், தனுஷ்க குணத்திலக்க மற்றும் அறிமுக வேகப்பந்து வீச்சாளர் ப்ரமோத் மதுஷான் ஆகியோருக்கு அணியில் வாய்ப்பு வழங்கப்பட தனஞ்சய டி சில்வா, வனிந்து ஹஸரங்க மற்றும் நிரோஷன் டிக்வெல்ல ஆகியோருக்கு ஓய்வு வழங்கப்பட்டிருக்கின்றது.

மறுமுனையில் இந்த ஒருநாள் தொடரினை ஏற்கனவே இலங்கை 31 எனக் கைப்பற்றிய நிலையில், தொடரின் இறுதிப் போட்டியில் ஆறுதல் வெற்றியொன்றினை எதிர்பார்த்து அவுஸ்திரேலிய அணி களமிறங்கியது.

# முதலாவது 20க்கு20 போட்டியில் இந்திய மகளிர் அணிக்கு வெற்றி

இலங்கை மகளிர் மற்றும் இந்திய மகளிர் அணிகளுக்கு இடையில் தம்புள்ள ரங்கிரி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற முதல் ரி 20 போட்டியில் இந்திய அணி 34 ஓட்டங்களால் அணி வெற்றியை பதிவு செய்துள்ளது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கு தீர்மானித்தது. அதன்படி களமிறங்கிய இந்திய அணிக்கு, இலங்கை மகளிர் அணி ஆரம்பத்திலிருந்து அழுத்தம் கொடுத்தது.



இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீராங்கனை ஸ்மிர்த்தி மந்தனா மற்றும் சப்பினேனி மேகனா ஆகியோர் ஆரம்பத்திலேயே ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து ஷப்பாலி வர்மா மற்றும் ஹர்மன்பிரீட் சிங் ஆகியோர் மத்திய ஓவர்களில் ஓட்டங்களை குவித்து இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். ஓட்டங்கள் அதிகரித்தபோதும், ஓட்டவேகம் குறைவாகவே நகர்த்தப்பட்டது.

ஷப்பாலி வர்மா 31 ஓட்டங்களையும், ஹர்மன்பிரீட் சிங் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்து ஆட்டமிழந்தனர். ஒருகட்டத்தில் இந்திய அணி 130 ஓட்டங்களை கடப்பதற்கான வாய்ப்புகள் இல்லாத போதும், கவீஷா டில்ஹாரியின் இறுதி ஓவரில் ஒரு சிக்ஸர் மற்றும் 3 பௌண்டரிகளை தீப்தி ஷர்மா மற்றும் ஜெமிமா ரொட்ரிகஸ் ஆகியோர் விளாசி அணியின் ஓட்ட எண்ணிக்கையை 138/6 ஆக உயர்த்தினர்.

ஜெமிமா ரொட்ரிகஸ் அதிகபட்சமாக 36 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற, தீப்தி ஷர்மா 8 பந்துகளில் 17 ஓட்டங்களை விளாசினார். இலங்கை அணியின் பந்துவீச்சில் இனோகா ரணவீர 3 விக்கெட்டுகளையும், ஓசதி ரணசிங்க 2 விக்கெட்டுகளையும் அதிகபட்சமாக வீழ்த்தினர்.

பின்னர் பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய இலங்கை மகளிர் அணி ஆரம்பம் முதல் தடுமாறத்தொடங்கியது. இளம் வீராங்கனை விஷ்மி குணரத்ன, சமரி அதபத்து மற்றும் ஹர்ஷிதா மாதவி போன்ற முன்னணி வீராங்கனைகள் விக்கெட்டுகளை பறிகொடுக்க 27 ஓட்டங்களுக்கு இலங்கை மகளிர் அணி தங்களுடைய முதல் மூன்று விக்கெட்டுகளையும் இழந்தது.

இதனைத் தொடர்ந்து கவீஷா டில்ஹாரி இலங்கை அணிக்காக ஓட்டங்களை குவித்தபோதும், ஓட்டவேகம் இந்திய அணியின் வெற்றியிலக்கை எட்டுவதற்கு போதுமானதாக இருக்கவில்லை. எனவே, இலங்கை அணியானது 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 104 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

இலங்கை அணிக்காக அதிகபட்சமாக கவீஷா டில்ஹாரி ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க, சமரி அதபத்து 16 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். இந்திய அணியின் பந்துவீச்சில் ராதா யாதவ் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

மூன்று போட்டிகள் கொண்ட ரி 20 தொடரின் முதல் போட்டியில் வெற்றிபெற்றுள்ள இந்திய மகளிர் அணி தொடரில் 10 என முன்னிலை வகிப்பதுடன், இரண்டாவது ரி 20போட்டி இன்று 25ம் திகதி நடைபெறவுள்ளது.

கிழக்கு மாகாண சதுரங்கப் போட்டியில்

# சாய்ந்தமருது சஹிரியன் நைட்ஸ் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு

**சாய்ந்தமருது விசேட நிருபர்**



கிழக்கு மாகாண சதுரங்கப் போட்டியில் சம்பியனான சாய்ந்தமருது சஹிரியன் நைட்ஸ் சதுரங்க அணி தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

கிழக்கு மாகாணவிளையாட்டுத் துறை அமைச்சின் ஏற்பாட்டில் திருகோணமலை சுகாதார திணைக்கள பிராந்திய பயிற்சி நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற மாவட்டங்களுக்கிடையிலான மாகாண சதுரங்க போட்டியில் அம்பாறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட சஹிரியன் நைட்ஸ் சதுரங்க அணியினர் (Zahirian Knights Chess Club)கிழக்கு மாகாண சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்று மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டு சாதனை படைத்துள்ளதுடன் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக சாய்ந்தமருது பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.எல்.சபூர்தீன் தெரிவித்தார். மாகாண மட்ட குறித்த சதுரங்க இறுதி போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணியை வீழ்த்திய நிலையில் அம்பாரை மாவட்ட அணியினர் சம்பியனாக தெரிவானமை குறிப்பிடத்தக்கது.

குறித்த சதுரங்கப் போட்டியில் அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த ஏ.எம்.ஷகீர் அஹமட் (அணி தலைவர்), எஸ்.எல்.எம்.சுஹூதான், எப்.எம்.பமிஹாத், எம் எச் எம். நுஸ்ரத்,ஐ.கே.எம்.ஆக்கில் கான், எம்ஸட் எம்.ஷனிப், ஆகியோர் கலந்து கொண்டனர். இவர்களின் இந்த வெற்றி மூலம் சாய்ந்தமருது பிரதேசத்துக்கும் அம்பாரை மாவட்டத்துக்கும் பெருமை சேர்ந்துள்ளனர்.

பலாங்கொடை

# கனகநாயகம் தேசிய பாடசாலை சதுரங்க விளையாட்டு சுற்றுப் போட்டியில் சாதனை

**பலாங்கொடை தினகரன் நிருபர்**



இரத்தினபுரி மாவட்டத்தின் பாடசாலை கிடையிலான சதுரங்க விளையாட்டு சுற்றுப்போட்டியில் பலாங்கொடை கனகநாயகம் தேசிய பாடசாலையின் செல்வி கிருஷாந்தினி மாணவி தேசிய மட்ட போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த 1819 ஆகிய திகதிகளில் இரத்தினபுரி படுஹேன தேசிய பாடசாலையில் இலங்கை பாடசாலை சதுரங்க சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சதுரங்க சுற்றுப்போட்டியில் பலாங்கொடை கனகநாயகம் தேசிய பாடசாலையில் இருந்து 29 மாணவர்கள் பங்குகொண்டனர்.

முதற்தடவையாக எமது மாணவர்கள் இந்த சதுரங்க விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றிய போதிலும் தேசிய மட்டத்திற்கு தெரிவாகியது எமது பாடசாலையின் ஒரு சாதனையாகும் என அதிபர் தெரிவித்தார்.

இம் மாணவர்களை சரியாக வழி நடத்தி தேசிய மட்டத்திற்கு வெற்றியை பெற்றுக்கொடுத்த பயிற்சி ஆசிரியர் அகில் அவர்களை பாடசாலை நிர்வாகம் நன்றியுடன் பாராட்டுகிறது.

# அக்கரைப்பற்று மாநகர சபையினால் உள்ளக உதைபந்தாட்ட அரங்கு திறந்துவைப்பு

**ஒலுவில் மத்திய விசேட, அக்கரைப்பற்று மத்திய, அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்கள்**

அக்கரைப்பற்று மாநகர சபையினால் உள்ளக காற்பந்தாட்டஅரங்கு திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினரும் தேசியகாங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவரும், முன்னாள்அமைச்சருமான ஏ.எல்.எம். அதாஉல்லாவின் பங்குபற்றுதலுடன்மாநகர முதல்வர் அதாஉல்லா அஹமட் சக்கீயினால் திறந்துவைக்கப் பட்டது.

அக்கரைப்பற்று மாநகர சபையின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட உதைபந்தாட்ட உள்ளகஅரங்கு 2022.06.19ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு மாநகரமுதல்வரினால் திறந்துவைக்கப்பட்டது.

அக்கரைப்பற்று மாநகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்றஇந்நிகழ்வில் மாநகர சபை உறுப்பினர்கள், அக்கரைப்பற்றுபிரதேச சபையின் தவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் அனைத்து நிறுவனங்களின் தலைவர், செயலாளர் உட்பட முன்னாள்உதைபந்தாட்ட வீரர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



அக்கரைப்பற்று உதைபந்தாட்ட லீக்கின் தலைவரும், மாநகரசபை உறுப்பினருமான அஸ்மி ஏ கபூர், செயலாளரும், விளையாட்டுஉத்தியோகத்தரும் எம்.எச்.அஜ்வத் ஆகியோருடன் லீக்கின் உயர் பீட உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



அக்கரைப்பற்று உதைபந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் பெற்றுள்ள உதைபந்தாட்ட கழகங்களுக்கிடையிலான சிநேகபூர்வ போட்டிகள் இடம்பெற்றது. கலந்துகொண்ட கழகங்களுக்கு நினைவுப்பரிசில்கள் வழங்கி வைக்கப்படதும் குறிப்பிடத்தக்கது. அக்கரைப்பற்று பிரதேசத்தில் உதைபந்தாட்ட விளையாட்டிற்காக தங்களை அர்ப்பணிப்பு செய்த மூத்த வீரர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூன் மாதம் 25ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.